
www.padippakam.com

# தமிழ்நேயம்

இதழ் - 11

ஜூன் 1999



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்நேயம் - ஆசிரியர் குறிப்புகள்

1. மே 6, 7 நாட்களில் பேரூர் ஆதீனம் ஏற்பாடு செய்த தமிழ்வழிபாட்டு உரிமை மாநாடு குறித்து சில செய்திகள் :- சென்னை உயர்நீதி மன்றத்தில் தமிழில் தான் வழிபாடு என்று பழ. கருப்பையா வழக்குத் தொடர்ந்த பொழுது, அரசு வழக்குரைஞர் ஆதரவிற்கு வரவில்லை. நீதி அரசரை அவரது அறையில் சந்தித்து இந்த வழக்கில் அரசு வழக்காட விரும்பவில்லை. தங்கள் விருப்பம்போல் தீர்ப்பு தரலாம் என்று அரசு வழக்கறிஞர்கள் கூறினாராம். பழனி முருகன் கோயிலில் இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழில் வழிபாடு நடைபெற்ற முறையை, கடந்த முந்நூறு ஆண்டுகளாக வடமொழிக்கு மாற்றியிருக்கிறார்கள். தமிழின் நெடுங்கால மரபு குறித்து பழ. கருப்பையா விவாதிக்க, முந்நூறு ஆண்டு மரபை பழ. கருப்பையாவும் ஒப்புகொள்வதால் வடமொழியிலேயே வழிபாடு நடைபெறட்டும் என்று நீதிஅரசர் தீர்ப்பு கூறி இருக்கிறார். நீதிமன்றத்தை நாம் குற்றம் சொல்லக்கூடாது.

2. கடவுளைப் பற்றி ஆராய்ந்து அறிவதைக் காட்டிலும் அனுபவித்தலே முக்கியம். அனுபவித்தல் தாய்மொழியாகிய தமிழின் வழியில்தான் சாத்தியம். தவிர, ஆகமம் என்பதன் பொருள் வழிபாட்டு நெறி என்பதைத் தவிர வேறு இல்லை. இப்படி விளக்கினார் பேராசிரியர் இரத்தினசபாபதி. தமிழில் வேள்வி செய்யலாம் என்ற திட்டத்தைச் செயல்படுத்தும் முறையில் தஞ்சை, மதுரை ஆகிய இடங்களில் சிவாச்சாரியார்களுக்குத் தேவையான பயிற்சிகள் தரப்பட்டன. இதனை செயற்படுத்திய மெய்கண்டதேவரை மாற்றிவிட்டு அந்த இடத்தில் ஒரு பார்ப்பனரை நியமிக்க ஏற்பாடு செய்தார் கலைஞர். தன்மானம்மிக்க தளபதி தமிழ்க்குடிமகனால் எதுவும் செய்ய இயலவில்லை. குடமுழுக்கு விழா ஒன்றின் போது ஸ்மார்த்தராகிய ஜெயேந்திரரை குடமுழுக்குச் செய்ய சிவாச்சாரியர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. மறுநாள் ஜெயேந்திரர் மன்னிப்பு கேட்ட பிறகுதான் குடமுழுக்கை சிவாச்சாரியர் செய்தனர். இப்படி ஒரு நிகழ்வை மாநாட்டில் தெரிவித்தவர் இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது என்றார்.

3. கோவைக்கு வந்திருந்த பெரியார்தாசன் அவர்களை மே 14 அன்று சந்தித்து, தமிழ்ச்சான்றோர் உண்ணாநோன்பு குறித்து கேட்டபொழுது அவர் தெரிவித்த சில கருத்துகள் :- தமிழில் நிர்வாகமும் நீதிமன்ற நடவடிக்கைகளும் நடைபெறவில்லை. 56 ஆட்சிமொழிச் சட்டம் செயற்படுத்தப்படவில்லை. வெளிநாட்டு ஏகாதிபத்தியமும் உள்நாட்டு ஏகாதிபத்தியமும் கைகோர்த்துக் கொண்டுள்ளன. தனியார் துறைக்கே எல்லாம் தாரை வார்க்கப்படுகின்றன. கல்வியும் தனியார் மயப்படுத்தப்படுகிறது. தமிழ்ச்சான்றோர் பேரவைக்கு இவைபற்றியெல்லாம் அக்கறை இல்லை. இந்நிலையில் தமிழ்க்கல்விக்கு என்ன வாய்ப்பு இருக்கிறது? நாராயணசாமி நாயுடு நடத்திய உழவர் போராட்டத்தைக் கலைஞர் எப்படி எதிர்கொண்டார் என்பதை நாம் மறக்க முடியாது.

4. இராசீவ் கொலை குறித்த வழக்கில் உச்ச நீதிமன்றம் இப்படி தீர்ப்பு தரும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. சந்திரசாமியின் வழியே செயற்பட்ட அனைத்துலக அளவிலான சதியில் சிவராசனும் தணுவும் வெறும் கருவிகளாகத் தான் செயற்பட்டனர்

(தொடர்ச்சி பின் அட்டை உள் பக்கம்)

படிப்பகம்

www.padippakam.com

1

# தமிழ்நேயம் : அகமும் புறமும்

## தமிழ்நேய நேர்காணற் கருத்தறிதல் வினாவுக்கான விடையளிப்பு :

**தென்றமிழ் மறை அடிகளிரும்பொறை, சேரர் கொற்ற வயவர், கோவை :**

இந்நிலவுலகில் நந்தமிழினம் தலையெடுத்த நாளிலிருந்தே, தோற்றவளனுந் துலங்கி வலிந்த அகச்சான்று – புறச்சான்றுகளுங் கூடிப் பண்டுதொட்டு வழங்கி நிலவாநின்ற செந்தமிழ்த் தேசியத்தை நாம் இடைக்காலந் தொடங்கிக் கொஞ்சங் கொஞ்சமாய், அவ்வப்போது, ஆங்காங்கே 'கூடப்போட்டு' வந்து, முற்றிலுமாகத் தொலைத்தும் விட்டோம். இன்று அதனை மீள உயிர்ப்பித்து இயல வைப்பான் வேண்டித் தொடுத்துள்ள "செந்தமிழ்த் தேசிய மீள் மறுமலர்ச்சி" நெடும் போராட்டத்தின் ஒருசிறு அடித்தளப் பகுதியே பட்டினிப் பாடுகிடப்புப் போராட்டச் சிக்கலாகும்.

இவ்வாறு அரிமா நோக்காக ஆய்ந்து காண்கையிலே, எம் மனக்கண் முன்பு கால் நூற்றாண்டுக்கு முன்னர் எம் 'சேரர் கொற்ற' எழுச்சிப் போராட்டமும் அதன் எதிர்வினையாகக் கலைஞரின் அரசு மேற்கொண்ட நடவடிக்கையுமே நிழலாடுகின்றன.

பெயர் – விளம்பர அறிவிப்புகள் யாவுந்தமிழாக வேண்டும் – எழுத்தாலன்றி, மொழியாலுந் தமிழாக வேண்டும் – என்பது அன்றைய நமது கோரிக்கை.

அதற்கு அன்று கலைஞரின் "முத்தமிழ்" அரசு என்ன செய்தது? அதுவுந் தானாகவன்றிச் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள், "தேர்தல் வருகிறது; நாம் கோட்டை விட்டுவிடக் கூடாது; தமிழுணர்வு நமக்கும் உண்டுதான் எனக் காட்டிவிட வேண்டும்" எனத் தூண்டிவிட்டதன் பேரில், ஒப்புக்குச் சப்பாணியாக, ஓர் அரச நிலையாணை (Standing Order) மட்டுமே பிறப்பித்தது.

பின்னர், இவர்கள்ால் திடுமென 'மலையாளத்துக்காரன்' எனக் கண்டுபிடிக்கப்பட்ட மக்கள் திலகம் ம.கோ.இரா. (எம்.ஜி.ஆர்) அரசாலேயே அவ்வாணைக்கு ஒருவாறு சட்ட வடிவம் வழங்கப்பட்டது.

பின்னே, இன்று வந்து, பெரிய ஆர்ப்பாட்ட அலட்டல் புரட்டல்களுடன், அச்சட்ட வடிவத்தின் செயலாக்கம் முடுக்கி வைக்கப்படுவதாக நம் தமிழ்க்குடி மகனார் வழியாக அறிவித்து, இன்னமும் அச்செயலாக்கம் – அரசதிகார வழி – ஒரு சிலரின் ஆளுங்கட்சி "அரிச்சந்திரக்" கண்களுக்கே புலப்படும் "சந்திரமதி தாலி" யாகவே நடைபெற்றுக் கொண்டுள்ளது . . !

இதுபோலத்தான், இன்றுதான், தமிழ் ஆட்சிமொழித் தேர்வில் தேறியோர்க்கே பணிநிலைப்பும், உயர்வுந் தரப்படும் என்று அமைச்சர் சட்டமன்றத்தில் 'வீரதீர' அறிவிப்புச் செய்து கொண்டுள்ளார். இவ்வாறு அரைக்கிணறு தாண்டும் ஆரியக் கழைக்கூத்துக் கண்துடைப்பு நாடகங்கள் இவர்களுக்குக் கைவந்த கலையாகும்!

படிப்பகம்

www.padippakam.com



இவர்களை மீறிச் செயற்பட முனைந்தால், இருக்கவே இருக்கிறது கைவசம், 'கலையுலக' மந்திர மாயக் கவர்ச்சிப் படைபல. அவற்றுக்கு இரையாக வேண்டியதுதான், கி.பி. 1967 –இல் எழுந்த இரண்டாம் இந்தியெதிர்ப்புக் கிளர்ச்சி போல!

இவர்களின் இந்த மெலிவு தளர்வு, நிலைச்சரிவுக்கெல்லாம் காரணம் என்னை? ஒப்பிலக்கணஞ் செய்த கால்டுவெல் ஐயரவர்கள் இயற்றிய ஒரேபெருங் கொடும்பிழையாகிய 'திராவிடம்' என்ற வேண்டாச் சொற்புனைவும், அதனை நம் தலைமீது சுமத்தலுமே மூலகாரணம். இனி, அதனையொட்டிய முதற்காரணம், இவர்கள் அதுகொண்டு 'திராவிட இனம்' 'திராவிட நாடு' எனப் பகர்ந்து, தீராத் திராவிட மாயையில் தாங்கள் சிக்கிச் சீரழிந்து, நம்மையும் அலைக்கழித்து வருவதேயாம்.

இதற்குத் தீர்வுதான் யாது? என்றைக்குத் தமிழினக் காவலர் (!) கலைஞரும் அவர்வழிவந்த வை.கோ. போன்ற திருக்கூட்டத்தாரும் தம்மை "மொழியாலுந் தமிழர்; இனத்தாலுந் தமிழரே; உரிமை நிலத்தாலுந் தமிழரே" என்று அஞ்சாது ஊரறிய, உலகறிய, அறைகூவி அறிவித்து அரசியல் நடாத்த முற்படுவார்களோ அன்றே தெளிவு புலப்படும். மற்று, இன–நாடுகளால் திராவிட–இந்தியர்களாக இருக்கும்வரை இவர்களை நம்ப இயலாது. கேடும் பழியுமே கிளைக்கச் செய்வர்.

இந்த நிலைமையில், தமிழ்வழித் தொடக்கக் கல்விக்கான பட்டினிப் பாடுகிடத்தலைத் தமிழ்ச் சான்றோர் கைவிட்டது பெரும் பிசகில்லையானாலும் அரசினர் அமைத்துள்ள ஆய்வுக் குழுவிலுள்ளோர் மீதே அனைத்துப் பொறுப்புஞ் சார்கின்றன என்பதை யாவரும் உணர்தல் வேண்டும். நம் எண்ணங் குறிக்கோள்களை நட்டாற்றில் கைநழுவவிடாதபடிக்கு, அவர்கள் தம் நுழைபுல மாட்சியால் அரசியலாரோடு ஆடும் கவறாட்டத்தில் மிக்க கவனங்கொண்டு திறம்பட ஆடி, இறுதி வெற்றி தமிழுக்கும் தமிழினத்திற்கும் வாகை சூடுவதாகவே அமைந்திட வழிவகை செய்திடல் வேண்டும். அரசினர் சூழ்ச்சிவலைக்கு ஆட்படாமல் சான்றாண்மைக்கு ஆழி எனப்படுவாராகவே குழுவினர் ஒவ்வொருவரும் இருப்பர், இயங்குவர் என்பதில் நமக்கும் நல்ல உறைப்பு உண்டு. வெல்க தமிழியம்! வாழ்க வையகம்!

✤✤✤

## துயர் பகிர்வோம்

- 'கவிதை என் கை வாள்' என்ற தொகுப்பின் மூலம் நம் நெஞ்சில் குடியேறியவரும் கொங்கு நாட்டின் நறுமணம் பரப்பும் சிறுகதைகள் பலவற்றை வடித்தவரும் 'சின்ன சின்ன மூக்குத்தியாம்' முதலிய பாடல்கள் மூலம் தமிழ் நெஞ்சங்களை குளிர்வித்தவரும் கலை இலக்கிய பெருமன்றத்திற்கு ஓர் அணிகலனாய் திகழ்ந்தவரும் அன்பு மணக்க நம்மோடு உரையாடியவருமாகிய கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம் அவர்களின் மறைவிற்கு பெரிதும் வருந்துகிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



# பட்டினிப்போர் - வெல்லுமா?

தாய்மொழிவழிக் கல்வி ஏன் தேவை? அதன் வலிமை எத்தகையது? இதை இழப்பதால் ஒரு சமூகத்திற்கு ஏற்படும் கேடு, அச்சமூகம் அடையும் மெலிவு எத்தகையது? தாய்மொழிவழிக் கல்வியை இழக்கும்போது, ஓரினம் தாய்மொழியை எவ்வாறு பையப்பைய இழந்து போகிறது? தாய்மொழியைப் பேணித் தன்னம்பிக்கையுடன் நிமிர்ந்த இனங்கள் எவை எவை? தாய்மொழியை இழந்து, தன்னம்பிக்கை இழந்து உலகில் உருக்குலைந்த இனங்கள் எவை எவை? தாய்மொழி என்பது வெறும் மொழி மட்டுமா? ஓரினத்தின் வரலாறு, தன்னம்பிக்கை, தற்சார்புப் பொருளியல், தேசக் கட்டுமானம் ஆகியவற்றுடன் தாய்மொழி செலுத்தும் ஆளுமை என்ன?

இவைபற்றிய தெளிவும் சிந்தனையும் சிறிதும் இல்லாதவரைக் கல்வி அமைச்சராகவும், அமைச்சர்களாகவும் கொண்டு இயங்குவது தமிழ்நாட்டரசு! தாய்மொழி குறித்தான ஆர்வம் அக்கறை என்பதெல்லாம் இவர்களுக்கு எள் முனையளவும் கிடையாது. தம் பதவி, அதைப் பயன்படுத்திக் கொண்டு எந்த அளவு சுருட்டிக் கொள்ளலாம் என்பதற்குமேல் சிந்திப்பதற்கு இப்போது இவர்களால் இயலாது.

இவர்களுக்குக் கொட்டி அளப்பவர்களெல்லாம் தமிழுக்குப் பெரும்பகையானவர்கள்! பணம் காய்ப்பு மரங்கள்! அவர்கள் சிந்திக்கும் வழியில்தான் இந்த அமைச்சர்கள் பெருமக்களும் சிந்திப்பார்கள்! அவர்கள் கூறுவதைத்தான் இவர்களும் கூறுவார்கள்!

அறிவு நெறிப்பட்ட முறையில் எடுத்துரைக்கப்படும் எந்தச் சொல்லும் இவர்களுக்குப் புரியாது. இவர்களின் நாற்காலிகளை ஆட்டங்காணச் செய்யும் போராட்டங்களைத் தமிழ் அமைப்புகள் ஒன்றன்பின் ஒன்றாக முன்னெடுப்பதன் மூலமே தமிழுக்காக எதையாவது செய்ய முடியும்.

ஆனால் அதே சமயம், அரசுடனான ஒப்பந்தங்கள், உறுதிமொழிகள் பேச்சுகளைத் தமிழ் அமைப்புகள் செவிமடுத்தே ஆகவேண்டும். தவறினால், உழவர் இயக்கத் தலைவர் நாராயணசாமி நாயுடு போல் வீழ நேரிடும்.

தமிழ்ச்சான்றோர் மேற்கொண்ட காலவரம்பற்ற உண்ணாமைப் போராட்டம் வெற்றியின் முதற்படியில் ஏறியுள்ளது என்பது ஐயத்திற்கிடமில்லாதது.

நுழைமுக (மெட்ரிக்) பள்ளிகள் உட்பட, அனைத்துப் பள்ளிகளிலும் 5 ஆம் வகுப்புவரை தமிழ் ஒன்றே பாடமொழியும் பயிற்று மொழியும் ஆகவேண்டும். இதனை ஆராய்வதற்கான குழுவின் அறிக்கை ஒருமாத காலத்திற்குள் பெறப்படும். இதற்கான ஒப்பந்தத்தில் அமைச்சர் கையொப்பமிட்டுள்ளார்.

தமிழ்வழி பயின்றோர்க்கே பணிவாய்ப்பில் முன்னுரிமை என்பதன் வாய்ப்புக் கூறுகளை ஆய்வு செய்ய அரசு உறுதியளித்துள்ளது.

சான்றோர் பேரவை மேற்கொண்ட பட்டினிப் போராட்டம் கோரிக்கைப் போராட்டமே. அரசு என்பது (போராட்டக்காரர்களின் உணர்வுகளுக்கு நேரெதிரான சிந்தனை

படிப்பகம்

www.padippakam.com



கொண்டவர்களை அமைச்சரவையில் உறுப்புகளாய்க் கொண்டிருந்தாலும், போராட்டக்காரரின் கருத்துகளைக் கொள்கை அளவில் ஏற்றல், மதிப்பீடு செய்தல், குழுவை அமைத்து ஆய்வு செய்தல், அறிக்கை அளித்தல், அதன்பின்பு நடவடிக்கை மேற்கொள்ளல் என்ற தன்மையில்தான் இயங்கும். அதனுடைய இயங்கு முறைக்கு நாம் வாய்ப்பளித்துத்தான் ஆக வேண்டும். அரசு சிந்திக்கவும், ஆராயவும் வாய்ப்பை நாம் தர மறுத்தால், பொதுமக்கள் நம்மைப் பிறழ உணர வழி ஏற்படும்.

ஆனால், அரசு காலங்கடத்தல், சிக்கல்களை முன்வைத்தல், எதிரிகளைப் பெரிதுபடுத்தல், தெளிவற்ற செயலூக்கமற்ற அறிக்கைகளை அளித்தல் என்னும் தந்திரங்களைக் கையாளலாம். அப்போது, பேரவை அடுத்த கட்டப் போராட்டத்திற்கான செயல்திட்டத்தைக் கைக்கொண்டிருக்கவேண்டும். நம் கோரிக்கை மக்கள் கோரிக்கை – தமிழ்ச் சமூகத்தின் கோரிக்கை என்பதை அரசுக்குப் புரிய வைக்க வேண்டும்.

பேரவையின் கோரிக்கைக்கு எதிர்மறையான முடிவுக்கு அரசு வரும்போது அது அம்பலப்பட்டுவிடும்.

ஆங்கிலத்துக்கு ஆதரவாக நிற்கும் கல்வியமைச்சரை எதிர்கொள்ளும் வல்லமையைப் பேரவை பெற்றாக வேண்டும். நுழைமுக (மெட்ரிக்) பள்ளிகள், தன்னுதவிக் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் தமிழ்வழி கற்பித்தாக வேண்டிய கட்டாயச் சூழலை உருவாக்கியாக வேண்டும்.

ஆசிரியர்கள் பலர் தமிழ்வழிக் கல்விக்கு மாறான சிந்தனை கொண்டுள்ளார்கள் என்பது உண்மைதான். ஆனால் ஆசிரியர் இயக்கங்கள் தமிழ்வழிக் கல்விக்கு ஆதரவாகவே உள்ளன. அவ்வியக்கங்களை வலுவாகச் செயல்படத் தூண்ட வேண்டும்.

தொடக்கக் கல்வி நிலையங்கள் செப்பமாக இயங்கத் தமிழ் அமைப்புகள் கவனம் செலுத்த வேண்டும். கல்விப்பணி அல்லாத பொறுப்புகள் ஆசிரியர்களிடமிருந்து விடுவிக்கப்பட வேண்டும். ஆசிரியர்களுக்குப் புத்தறிவுப் பயிற்சி தரவேண்டும். ஊர்ப் பொதுமக்களின் கண்காணிப்புக்குப் பள்ளிகள் உட்படுத்தப்பட வேண்டும். இதைச் செய்தால் மூன்றாண்டுகளில் தொடக்கக் கல்வி ஒழுங்குபடும்.

தமிழ்ச் சான்றோரின் தளரா எழுச்சிதான் தமிழக அரசை உறுதிபடச் செயற்பட வைக்கும். தமிழ் மக்களின் மறதியையும் ஏமாளித்தனத்தையும் முதலீடாகக் கொண்டு ஆட்சியை நடத்துகின்றவர்கள் தாமாக எந்த நல்வினையையும் செய்ய மாட்டார்கள். எனவே, அரசின் அடுத்த அறிவிப்பையும் செயல்முறையையும் பொறுத்து, மீண்டும் வன்கடுமையான ஒரு பட்டினிப்போரோ, அல்லது பிறவழிப் போராட்டங்களோ தேவைப்படலாம். தமிழ்ச் சான்றோரின் நம்பிக்கையை அரசு இழக்குமானால் போராட்ட வடிவம் கடுமையானதாக அமையும். இன்று போராட்டம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதே தவிரக் கைவிடப்படவில்லை. எனவே, தமிழமைப்புகள் மேலும் செயலூக்கம் பெறுவதே உடனடித் தேவை எனக் கருதுகிறோம்.

– இரணியன்
திருவள்ளுவர் பேரவை, வந்தராசபுரம்.

படிப்பகம்

www.padippakam.com



# தி.மு.க -வின் துரோக வரலாறு!

தி.மு.க. பா.ஜ.க. கூட்டணி சிலருக்கு ஆச்சரியத்தையும், பலருக்கு அதிருப்தியையும் அளித்துள்ளது. ஆனால் தமிழர்களின் நலன் குறித்து அக்கறையுள்ளோருக்கு ஆச்சரியமும், அதிர்ச்சியும் இருக்க முடியாது! தி.மு.க. பா.ஜ.க. கூட்டணி கறுப்பு அத்தியாயம் என்று குறிப்பிடுவது சரிதான் என்றாலும் திடீரென்று நிகழ்ந்த சம்பவம் அல்ல என்பதை தமிழக அரசியல் வரலாற்றைக் கூர்ந்து கவனிப்பவர்களுக்குப் புரிந்து கொள்ள முடியும். தி.மு.க.வின் துரோக வரலாறு 1980களிலேயே துவங்கி விட்டது. அதன் எத்தனையோ கறுப்புப் பக்கங்களில் தற்போதைய பா.ஜ.க. வுடனான கூட்டணி நிகழ்வும் ஒன்று!

1975–77 மிசா காட்டாட்சியை யாரும் மறந்திருக்கமாட்டார்கள். அத்தகைய காட்டாட்சியின் நாயகியான திருமதி. இந்திராவை நேருவின் மகளே வருக! நிலையான ஆட்சி தருக! என்று 1980ல் சென்னை மெரினா கடற்கரையில் கலைஞர் வரவேற்றார். அதன்மூலம் 18 மாதங்கள்.சிறைக் கூடத்தில் தி.மு.க. தொண்டர்கள் புரிந்த எண்ணற்ற தியாகங்களைத் துச்சமெனக் காற்றில் பறக்கவிட்டார்! "அரசியலில் நிரந்தர எதிரிகளும் இல்லை! நிரந்தரப் பகைவர்களும் இல்லை" என்று அரசியல் விளக்கம் கொடுத்து அனைவரையும் வாயடைக்கச் செய்தார். இது நடந்தது 19 ஆண்டுகளுக்கு முன்பு; ஆனால் சனநாயகத்திற்காக ஆட்சியைப் பறிகொடுத்தோம் என திரு. கருணாநிதி வசனம் பேசினார். அன்று ஆரம்பித்த அரசியல் சறுக்கல் இன்று பா. ஜ.க. கூட்டணி என்ற அதள பாதாளத்தில் வந்து விழுந்துள்ளது. துவக்கம் முதற்கொண்டே தி.மு.க. பார்ப்பனிய எதிர்ப்பை பேசி வந்துவிட்டு இப்படித் திடீரென்று பார்ப்பனர் நலன் பேணும் பார்ப்பன (பாரதீய) ஜனதா கூட்டணியில் இடம் பிடித்து கொண்டதே என்று சிலருக்கு வருத்தம்! உண்மையில் பெரியாருக்குப் பின் திராவிட இயக்கம் வெளிப்படுத்தி வந்த பார்ப்பனிய எதிர்ப்புப் பாணி (ஒரு சந்தர்ப்பவாத வரலாறும், தி.மு.கவின் சந்தர்ப்பவாத பார்ப்பனிய எதிர்ப்பின் உச்சம்தான் அல்லது அதன் மறுபக்கம்தான் இன்றைய பா.ஜ.க. வுடனான கூட்டணியாகும்.

## மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் தி.மு.க.வின் ஆட்சி :

"மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற தி.மு.க. வின் முழக்கம் என்பது மாநிலத்தில் தி.மு.க.வின் ஆட்சியும், அதன் முதல்வராக என்றும் கருணாநிதி தான் என்ற அளவுக்கு சுருங்கியது. மத்தியில் ஆட்சியாளர்களின் மாற்றத்திற்கு ஏற்ப தி.மு.க.–வின் நிலையான ஆட்சிக்கு எந்த வகையான அரசியல் தேவையோ அதுவே மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்பதற்கான விளக்கமானது. 19 ஆண்டுகளுக்கு முன்பு இந்திராவை நிலையான ஆட்சியைத் தரச் சொன்னதும் வாஜ்பாயை நிலையான ஆட்சிக்காக ஆதரிப்பதும் தி.மு.க.வின் நிலையான ஆட்சிக்காகத்தான் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். இத்தகைய சந்தர்ப்பவாத, சீரழிந்த அரசியலுக்கு

படிப்பகம்

www.padippakam.com



விளக்கம் கொடுப்பதற்குத் தான் கலைஞரின் தமிழ்ப் புலமையும், கவித்திறனும் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றன. தி.மு.க. தலைவர் அடிக்கடி பொதுக்கூட்டங்களில் ஒரு உதாரணத்தை கூறி வந்துள்ளார். அதாவது மாமியார் – மருமகள் சண்டை! வீட்டின் அதிகாரம் மாமியாரிடத்தில் உள்ளது! மருமகளுக்கு தன் கையில் வரவேண்டும் என்ற ஆசை! சமையலில் ஈடுபடும்போது அடிக்கடி இருவருக்கும் சண்டை வந்து விடும். ஒருமுறை, மாமியார் கையில் கரண்டியுடன் பருப்பை எடுத்துக்கொண்டிருக்கும்போது மருமகள் வெறும் கரண்டியுடன், மாமியாரை சண்டைக்கு இழுத்தாள்! வேக வேகமாக கரண்டியை ஆட்டினாள்! ஆனால் மாமியாரோ வேக வேகமாகக் கரண்டியை ஆட்ட முடியாது! ஏனெனில் மருமகள் கையில் உள்ள கரண்டியோ வெறும் கரண்டி! மாமியாரிடம் உள்ளதில் பருப்பு உள்ளது. ஆட்டமுடியாது! என விளக்கம் கொடுத்தார். ஆட்சியில் இருக்கும்போது வேகமாகக் கொள்கை பேச முடியாது எனக் கூறி கொள்கையை கைவிட்டு விடுவதை, சந்தர்ப்பவாதத்தை நளினமான உதாரணத்தின்மூலம் மூடிமறைத்தார். இதன்மூலம் 1975க்கு பிறகு 25 ஆண்டுகளாக தி.மு.க. தலைவர்களை, அணியினரை மேலிருந்து கீழ்வரை இலட்சிய வாழ்வுக்கு கொள்கைப் பணிக்கு பழக்கப்படுத்தாமல் அதிகார வெறிக்கு, ஊழல் அரசியலுக்குப் பழக்கப்படுத்தினார்! அதனால் இன்று அதிகார அரசியலுக்காக அவரின் குடும்பத்தில் இருந்து கட்சி தொண்டர் குடும்பம் வரை எதையும் செய்யத் தயாராய் உள்ளனர். அதன் அப்பட்டமான வெளிப்பாடே இன்றைய அதிகாரத்தைத் தக்க வைக்க பா.ஜ கட்சியுடன் கூட்டணியாகும். இதுபோன்று எத்தனை சொல்வது! ஈழப் பிரச்சினை, காவிரிப் பிரச்சினை, தமிழ் ஆட்சி மொழிப் பிரச்சினை, மய்ய – மாநில அதிகாரம், என அனைத்தையுமே தமது நிலையான ஆட்சிக்காக விட்டுக் கொடுத்து மய்ய அதிகாரத்தில் உள்ள அல்லது வரவிருக்கும் கட்சியினருடன் திமுக வின் கூட்டணி வைக்கப்பட்டுள்ளதே வரலாறாகும்.

## தமிழுக்காக தி.மு.க. இனித் தொண்டாற்றுமா?

பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவேந்தல் நிகழ்வில் (1996ம் ஆண்டு) கலைஞர் தலைமையேற்று உரையாற்றும்போது எனது ஆட்சி சனநாயகத்திற்காக ஒருமுறையும் (1975) ஈழப் பிரச்சினைக்காக ஒரு முறையும் (1989) கலைக்கப்பட்டதாகவும் மறுமுறை தமிழ் ஆட்சி மொழிக்காக கலைக்கப்பட்டால் எனது வாழ்வின் பாக்கியமாகக் கருதுவேன் என வீரவசனம் பேசினார். ஆனால் அண்மையில் தமிழ்ச் சான்றோர்கள் நடத்திய பட்டினிப் போரில் 7 தடைகளை பட்டியலிட்டு தமிழ் ஆட்சி மொழிக்கு எதிரான சிந்தனையை வெளிக்காட்டினார். தமிழ்மொழி வளர்ச்சி என்பது 1977க்கு பிறகு அவரது வளர்ச்சியாகச் சுருக்கப்பட்டுத் தமிழும், அவரும் ஒன்றுதான் என்ற முழக்கம் முன்னிறுத்தப்பட்டது. இது சந்தர்ப்பவாதம் அல்ல! திருந்தவே மாட்டார்கள் என்பதற்கான அறிகுறிதான். தி.மு.க.வின் இன்றைய அரசியல் சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து வெளியேற இனி அக்கட்சியில் உண்மையான தொண்டர்கள் இல்லை! முரசொலி மாறன் மற்றொரு சுப்பிரமணிய சுவாமிதான். அதிகாரத்தரகர் தான்! கலைஞரின் மனசாட்சி என்று மாறன் குறிப்பிடப்படும்போது கலைஞரின் அதிகார அரசியலுக்கு உரிய தரகர்தான் மாறன் என்பது யாருக்காவது விளங்காமலா போய்விடும்!

படிப்பகம்

www.padippakam.com



## தி.மு.க. வின் இந்த நிலைமைக்கு யார் காரணம்?

துவக்கம் முதற்கொண்டே திமுக மாநில நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பொழுதெல்லாம் காங்கிரஸ் கட்சியும், இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் இனவாதமாக சித்திரித்து வந்துள்ளன. காங்கிரஸ் கவிழும்பொழுது எல்லாம் முட்டுக் கொடுத்துப் பழகிப் போன கம்யூனிஸ்ட்கள் இன்றுவரை கொள்கை ரீதியாகத் தமிழர் விரோதக் கட்சிகளாகவே இருப்பதும், இருக்கின்ற மாநிலத்தில் அந்தந்த மொழியடிப் படையிலான கட்சியாகவே (கேரளா, மேற்கு வங்காளம்) உள்ளன என்பதும் மற்றொரு விசயம்!

இவர்களுக்கு இடையில் முதல் அணி, இரண்டாவது அணி, மூன்றாவது அணி என்பதெல்லாம் நாடாளுமன்ற அரசியலின் சித்து விளையாட்டுக்காகத்தான் அல்லது அதிகாரப் போட்டிக்குதான். மொத்தத்தில் இடது சாரியும் கிடையாது. மூன்றாவது அணியும் கிடையாது. அனைவரும் வலதுசாரிகள்தான். அதிகாரத்திற்காக போட்டியிட்டுக் கொண்டிருக்கும் ஒரே சாரியினர் தான். இதில் திராவிடர் கழகம் அரசியல் சாராத அணி என்று கூறிக் கொண்டாலும் பார்ப்பனர்களை நேரடியாக ஆதரித்து இத்தகைய சரணாகதியைத் தொடங்கிவைத்த பெருமை வீரமணிக்குத்தான் உண்டு. இவ்வகையில் தமிழர் நலனிலிருந்து எந்தத் தேசியக் கட்சியும் கடந்த 50 ஆண்டுகளாக வேலை செய்யாத போது திமுக. தனித்து நின்று அதிகாரத்தையும் தக்க வைத்துக் கொண்டு செயல்பட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது. அதன் விளைவே எதிர்மறையான அரசியலை தி.மு.க. கொண்டது. இதற்கு மற்ற அனைத்துக் கட்சிகளுமே இத்தகைய தமிழக சமூக நிலையை உருவாக்குவதில் பின்புலமாக இருந்துள்ளன.

## இத்தடைகளைக் கடப்பது எப்படி?

மேற்சொன்ன அக, புறத் தடைகளைக் கடக்காமல் தமிழ் அமைப்புகள் முன்னேற முடியாது! மொழி, இனம் சார்ந்த கோரிக்கைகளில் மட்டுமே தமிழியக்கங்கள் முடங்கியுள்ளன. சமூகத்தின் அனைத்து தளத்திலும் நடைபெறும் போராட்டத்தில் தமிழ் அறிஞர்கள், ஆர்வலர்கள், தமிழாசிரியப் பெருமக்கள், தமிழியக்கத்தின் முன்னோடிப் படையினர் கலந்து கொள்வதுடன் தலைமை தாங்கும் அளவிற்கு மாற வேண்டும்.

## தமிழர் இயக்கங்கள் முன் உள்ள கடமை :

இந்நிலையில், தமிழ்நாட்டுத் தமிழர் இயக்கங்கள், தமிழ், தமிழர், தமிழ்நாடு எனும் அரசியலில் முன்னெடுத்துச்செல்வதில் ஓரணியில் திரள வேண்டும். தி.மு.க. பாணியிலான பார்ப்பனிய எதிர்ப்பு, தமிழ்த்தொண்டு, என்பதைக் கைவிட்டுவிட்டு தமிழ்தேசிய அரசியல் களத்திலிருந்து தமிழ்ப் பணியை, (அதன் இன்றைய விரிவான பொருளிலிருந்து) கட்டியமைக்க வேண்டியது தமிழர் இயக்கங்களின் கடமையாகும். தமிழர் நலன் என்பது இனி திராவிட 'தேசியக்' கட்சிகளிடம் இல்லை என்பது இந்த நூற்றாண்டின் கடைசி 25 ஆண்டுகளில் இக்கட்சிகளின் செயல்பாட்டில் நிரூபிக்கப்பட்ட

படிப்பகம்

www.padippakam.com



உண்மையாகும். மாறாகத் தொடர்ந்து துரோகங்களின் வரலாறாகத்தான் அக்கட்சிகளின் செயல்பாடு அமைந்துவருவதை எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

எனவே தி.மு.க. பா.ஜ. கூட்டணி, இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் பெரியார் துவக்கி வைத்த பார்ப்பனிய எதிர்ப்பு, தமிழ்நாடு தமிழருக்கே, இந்திய மாயை எதிர்ப்பு, அதிகார அரசியல் எதிர்ப்பு, சாதி, மத எதிர்ப்பு என்பதை பெரியார் தொண்டர்களிடம் இனி எதிர்பார்க்க வேண்டாம் என்று அவர்களே அறிவித்துக் கொண்டதன் அடையாளம். இந்த நூற்றாண்டின் இறுதிமுனையில் நின்று தி.மு.க. பா.ஜ.க. கூட்டணியினர் நமக்கு சொல்வது இதுதான். அதனை நிறைவேற்ற, தலைமையேற்க யார் வருவார்கள் எனத் தமிழ்நாடு எதிர்நோக்குகின்றது! யார் அணியமாகியுள்ளனர்! நாம் அணியமாக, நம்மை வளர்த்துக் கொள்ள என்ன செய்வது என்பதற்கான மறைமுக அறிவிப்பேயாகும்.

– இரவிராசன்

# தமிழியக்கங்கள்

## மாணவர் நடுவக் கல்வி

**(இம்மடலை எழுதியுள்ள திரு. தி. இராமகிருட்டிணன் கணினிப் பொறியாளராக அமெரிக்காவில் உள்ளார். சென்ற 1999 சனவரி மாதம் இந்தியா வந்திருந்த பொழுது பல்லடம் தாய்த்தமிழ்த் தொடக்கப் பள்ளிக்கு வருகை தந்தார். அமெரிக்கா திரும்பியவுடன் அங்கு வாழும் இந்திய நண்பர்களுக்கு நமது பள்ளியின் செயல்பாட்டை விளக்கி எழுதிய மடலின் தமிழ்மொழிபெயர்ப்பை தமிழ்நாட்டு மக்களின் பார்வைக்குப் படைக்கிறோம்).**

**இந்தியாவில் கல்வி என்பது எளிதில் பணம் சேர்க்கும் ஒரு தொழில்துறையாக ஆகிவருகிறது என்பது வருத்தமளிக்கக் கூடியதாயிருப்பினும் அஃது அனைவரும் அறிந்துள்ள மறுக்க முடியாத உண்மையே. ஒரு காலத்தில் கண்ணியமுள்ள ஒரு பணித்துறையாக இருந்த கல்வித்துறை இப்பொழுது கல்வி நிலையங்களை நடத்துகின்றவர்களுக்கு உறுதியாகப் பணம் தரும் வழிமுறையாக மாறிவிட்டது. கல்வி நாடிச் செல்வோரிடம் அதுபணம் பறிப்பது மட்டுமன்றி மாணவனின் ஆற்றலையும் படைப்புத் திறனையும் உறிஞ்சி வற்றடித்து விடுகிறது. தரமான கல்வி என்பது பெரும் பணம் படைத்தவர்களுக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டது. கல்வி என்னும் அடிமரத்தைப் பணவேட்டைக்காளான்கள் ஒட்ட உறிஞ்சி விடுவதால் கல்வி மரமே வாடி, வதங்கி, காய்ந்து வருகிறது.**

ஏழை, நடுத்தர வகுப்பிலிருந்து வரக்கூடிய குழந்தைகளுக்குப் பெரும்பான்மையான தனியார் பள்ளிகள் இரண்டு மூன்று தடைகளைப் போடுகின்றன.

1. கல்வி அதிகச் செலவுள்ளதாக இருப்பது.
2. பயிற்றுமொழி தாய்மொழி அல்லாத ஆங்கிலத்திலிருப்பது
3. பெற்றோர்களில் இருவரும் அல்லது ஒருவராவது பட்டதாரியாக இருக்க வேண்டுமென்பது.

படிப்பகம்

www.padippakam.com



இவ்வளவு தடைகள் இருப்பினும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையுள்ள ஏழை, நடுத்தரக் குடும்பத்திலுள்ள பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை ஆங்கில வழிப் பள்ளிகளுக்கே அனுப்புகின்றனர். ஏனெனில் அவர்களுடைய பிள்ளைகள் இந்தப் 'பந்தயத்தில்' பின் தங்கி விடக்கூடாதல்லவா? ஆனால் வருந்தத் தக்க உண்மை. என்னவென்றால் ஆங்கிலங் கற்ற பெற்றோர்களின் குழந்தைகளோடு இவர்களின் குழந்தைகள் போட்டியிட முடியாத நிலை உருவாகி விடுகின்றது. ஏனெனில் கல்வி என்பது பள்ளியில் மட்டுமன்றி வீட்டிலும் நிகழவேண்டிய ஒரு செயல். குறைந்த வருமானக் குடும்பப் பிள்ளைகளின் கல்வி தொடங்கும்போதே சாதகமான சூழல் இல்லை. இந்தப் பாதகச் சூழலின் விளைவு – அக்குழந்தைகள் தன்னம்பிக்கையை இழக்கிறார்கள். எனவே கல்வித் துறையில் ஓர் அறிவுச் சறுக்கல் ஏற்பட்டு வருகின்றது.

ஆயினும் இந்தப் பாலைநிலத்திலும் சில நம்பிக்கை விதைகள் முளைக்கத்தான் செய்கின்றன. இருண்டவானில் சில ஒளிக்கீற்றுகள் புலப்படுகின்றன. குழந்தைகளின் படைப்பாற்றலை வளர்த்து அவர்களின் உள்ளங்களை வளப்படுத்துகின்ற புதுமுறைப் பள்ளிகள் சில அங்கங்கே இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அவை மக்கள் தொகையில் ஏழைத் தரப்பினர்க்கும் கிடைக்கும்படியாக இருக்கவும் முயல்கின்றன.

இந்தியாவில், என் சொந்த ஊரில் (பல்லடத்தில்) அத்தகைய ஒரு பள்ளிக்கு இம்மாதத் தொடக்கத்தில் சென்று பார்க்கும் நல்வாய்ப்புக் கிட்டியது. அப்பள்ளியின் சில தனிச்சிறப்பியல்களாவன.

1. சிறிய அளவு வகுப்புகள்
2. குழந்தைகளுக்கு மரியாதை
3. தாய்மொழியிற் கல்வி
4. பெற்றோர்களின் பங்கேற்பு
5. குறைந்த வருமானக் குடும்பத்தினர்க்கும் கிடைக்கக் கூடிய நிலை.

மழலை மொட்டுகள், மழலை மலர்கள், 1 ஆம் வகுப்பு ஆகிய மூன்று வகுப்புகளுடன் இந்தக் கல்வியாண்டில்தான் இப்பள்ளி தொடங்கப் பெற்றுள்ளது. சில வாரங்களுக்கு முன்னால் முன் அறிவிப்பு இன்றி அங்குச் சென்றிருந்தேன். என்னை முதலில் கவர்ந்தது, அந்தச் சின்னஞ்சிறு மழலைப் பிஞ்சுகள் காட்டிய ஆர்வமும் ஈடுபாடும்தான். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களின் திறனை வெளிக்காட்டத் துடிக்கின்றனர். ஒரு குழந்தை ஒரு பாடலைப் பாடும்பொழுது இடையில் தவறவிட்ட அடியைத் தொடர உடனிருந்த ஒவ்வொருவரும் துணை நிற்கின்றனர்.

எடுத்தவுடன் எண்ணும் எழுத்தும் கற்பிப்பதில் கவனம் செலுத்தப்படுவதில்லை. குருட்டு மனப்பாடமும் வலியுறுத்தப் பெறுவதில்லை. பாடல்கள், படங்கள், கருத்துப் படங்கள் மூலமாக, புதிய சொற்களும் கருத்துகளும் அறிமுகப்படுத்தப் பெறுகின்றன. படிப்படியாக எழுதக் கற்பிக்கப்பெறுகின்றனர். அதுவும் அகர வரிசையிலன்று. எழுதுவதற்கு எளிய எழுத்துகள் முதலில்; பிறகு கடினமானவை என்ற வரிசையில். கற்றல் என்பது விளையாட்டும் வேடிக்கையும் கூடியது என்பதே அவர்கள் இலக்கு. கடும் பயிற்சிக்கும் வீட்டுப் பாடவேலைக்கும் அதிக அழுத்தம் தரப்பெறுவதில்லை. ஒவ்வொரு வகுப்பிலும் ஏறத்தாழ 25 குழந்தைகள்.

படிப்பகம்

www.padippakam.com



ஆசிரியர்கள் குழந்தைகளை அவ்வளவு மரியாதையாக நடத்துவது நான் வேறெந்தப் பள்ளியிலும் கண்டதில்லை. தனக்கும் மூத்தவர்களை, பெரியவர்களை அழைப்பதுபோன்றே மரியாதை ததும்ப 'நீங்க' என்றே விளிக்கப்படுகின்றனர். இதன் அடிப்படை என்னவெனில் குழந்தைகள் மரியாதையாக நடத்தப்பெறும் பொழுது அவர்களின் தன்மதிப்பு உணரப்படுவதால் எதிர்காலத்தில் சிறந்த குடிமக்களாக உருவாகின்றனர். எங்கள் நோக்கம் சிறந்த மாணவர்கள் அன்று; சிறந்த மக்களை உருவாக்குவதே எனப் பள்ளி பெருமைப் பட்டுக்கொள்வதில் பொருளிருக்கின்றது எடுத்துக்காட்டாக அவர்களுக்கு, மொழிகள், கலைகள், தொழில்கள், அறிவியல்கள் கற்பிக்கப் பெறுவதோடு செய்வன திருந்தச் செய்யும் திறனும் தூய்மையும் நேர்த்தியும் கற்பிக்கப் பெறுகின்றனர். குழந்தைகளிடையே போட்டி மனப்பான்மைக்கு மாற்றாகக் கூட்டுறவுணர்வு வளர்க்கப் பெறுகின்றது. குழந்தைகள் தம் அண்ணன், அக்கா, தாயாரை விளிப்பதுபோல் ஒருவகை உறவுணர்ச்சியோடு அழைப்பதால் பிற பள்ளிகளில் காணப்படுவது போல் ஓர் அயன்மைத் தன்மை இங்கு இல்லாமல் ஒரு குடும்பப் பாங்கான சூழல் நிலவுகிறது.

சனவரி 2 ஆவது வாரத்தில் நடைபெற்ற அப்பள்ளியின் பெற்றோர் – ஆசிரியர் கூட்டத்தில் நானும் ஒரு பார்வையாளனாகக் கலந்து கொண்டேன். ஏறத்தாழ 60 பெற்றோர்களும் ஆசிரியர்கள் மூவரும் ஆட்சிக்குழு உறுப்பினர் சிலரும் கலந்து கொண்டனர். அதில் கலந்து கொண்ட அனைவருமே செயலூக்கமாகப் பங்கெடுத்துக் கொண்டமை, கூட்டத்திற்கு உயிர்ப்புக் கொடுத்தது. அத்தனை பெற்றோர்கள் – பெரும்பாலானவர்கள் அன்றாடக் கூலிகள் – தங்கள் கூலியை இழந்து – போக்குவரத்துக்குச் செலவிட்டு வருகை தந்திருந்தமை பள்ளியின்பால் அவர்களுக்கு இருந்துவரும் ஈடுபாட்டுக்குச் சான்று பகர்கின்றது.

இந்தப் பள்ளியும் இதைப்போல் தமிழ்நாட்டில் ஏனைய பகுதிகளில் நடைபெற்று வரும் இன்னும் பத்துப் பள்ளிகளும் ஓர் அமைப்பில் இணைந்துள்ளன. அவை ஒரு குடும்பத்தின் உறுப்பமைப்பாகும். சென்னைக்கருகில் முதற்பள்ளி சில ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பெற்றது. பனியன் நகரான திருப்பூரில் மிகப்பெரிய பள்ளி நடைபெற்று வருகின்றது. சில ஆண்டுகளுக்கு முன்னால் இப்பள்ளி தொடங்கப் பெற்ற பொழுது பெரும்பாலான பெற்றோர்கள் புதுவகையான இப்பள்ளியின் அணுகுமுறையை உணராது தங்கள் குழந்தைகளை அனுப்பத் தயங்கினர். சென்ற கல்வியாண்டில் அதே பள்ளியில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களை இடமில்லாமல் திருப்பியனுப்ப வேண்டியதாயிற்று! நிலைமை இவ்வாறிருக்க, இதன் உடன்பள்ளிகள் போலவே இதற்கும் அரசு ஏற்பிசைவு இல்லை என்பது ஓர் அவலமான உண்மை. ஏனெனில் இவற்றிற்கு ஏற்பிசைவுக்குத் தக்க நிலையான இடமோ, சொந்தக் கட்டடங்களோ இல்லை! இப்பள்ளியைப் பற்றிய சிறந்த கட்டுரை ஒன்று அக்டோபரில் வெளியான 'கல்கி' வார இதழில் வெளிவந்திருக்கின்றது.

இப்பள்ளிகள் பொதுவான பாடத்திட்டத்துடன் பிறவகைகளிலும் ஒன்றிணைந்து இயங்கி வருகின்றன. தாய்மொழியாகிய தமிழோடு 3 ஆம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் ஒரு பாடமாக பயிற்றுவிக்கப்படுகின்றது. பிற பள்ளிக் குழந்தைகளின் ஆங்கில

படிப்பகம்

www.padippakam.com



அறிவிற்குச் சென்னைப் பள்ளிக்குழந்தைகளின் ஆங்கில அறிவு எள்ளளவும் தாழ்ந்ததில்லையென அண்மையில் நான் படித்தறிந்தேன். எனினும் நான் அதை நேரிற் பார்க்க இயலவில்லை. நீங்கள் யாராகிலும் சென்னை செல்கிறபொழுது இதனைத் தெரிந்துவரலாம்.

இதில் எந்தப் பள்ளிக்கும் அரசின் உதவி இல்லை. மக்களுக்குப் பணியாற்றும் நோக்குடைய கல்வியையே உருவாக்கி வருவதாகத் தம்பட்டமடித்துக் கொள்ளும் அரசும் இவர்களைக் கண்டுகொள்ளவில்லை. இப்பள்ளிகள் பிள்ளைகளிடம் வாங்கும் குறைந்த கட்டணத்தையும் நல்ல மனம் படைத்தவர்களின் நன்கொடைகளையுமே பெரிதும் சார்ந்திருக்கின்றன. பள்ளிக் கட்டணம் மிகக் குறைவாயிருப்பதால் சில பள்ளிகள் பெருங்கடனில் செயல்பட்டு வருகின்றன. எடுத்துக்காட்டாக எமது ஊர் பல்லடம் பள்ளி ஓர் இலக்கத்துக்கு மேலாக்க் கடன்பட்டிருக்கின்றது. 36% அளவுக்கு வட்டி செலுத்துவதாக அறிய வருகிறேன். மாதம் 25–50 உருபா வரை பள்ளிக்கட்டணம் வாங்குகின்றன. நூறு உருபா சேர்க்கைக் கட்டணம். இவையே மாணவரிடமிருந்து இவர்கள் பெறும் கட்டணம்.

ஆசிரியர்கள் மிகக் குறைந்த சம்பளம் பெறுகின்றனர். பல்லடம் பள்ளியில் ஏறத்தாழ ஆயிரம் உருபா பெறுகின்றனர். குறைந்த சம்பளமாயினும் ஆசிரியர்கள் வேலையில் ஆர்வத்தோடும் அக்கறையோடுமிருக்கின்றனர். அவர்கள் அரசுப் பள்ளிக்கோ அல்லது வேறு நல்ல சம்பளம் கிடைக்கும் வேலைகளையோ எதிர் பார்த்ததில்லை. பள்ளியின் குறிக்கோளும் சூழலும் அவர்களுக்குப் பிடித்துப்போய் விட்டன. ஆயினும் அவர்களின் உழைப்பு இன்னும் அதிகப் பெறுமதியுடையது என்பதை மறைக்கக்கூடாது.

குறிப்பு 1 : பல்லடம் பள்ளியின் பெயர் : தாய்த்தமிழ்த் தொடக்கப்பள்ளி. திருவள்ளுவர் கல்விப்பணி அறக்கட்டணை அதனை நடத்திவருகிறது. திருவள்ளுவர் தமிழில் மிகப் பெரும்புலவர் பெருமான்.

குறிப்பு 2 : மேற்படிப்புக்குச் செல்ல விழைவோர் பள்ளி நிலையில் ஆங்கிலத்திற் பயிலவேண்டுமென்று நீங்கள் எண்ணினால் நான் அதனை மறுக்க வேண்டியுள்ளது. நானும் என் உடன்பிறப்புகள் நால்வரும் உயர்நிலைப்பள்ளி முடியும் வரை தமிழ் வாயிலாகவே கற்றோம். பல்கலைக் கழகம் சென்றபொழுது எனக்குப் பெரிய இடர்பாடு ஒன்றும் நேர்ந்துவிடவில்லை.

குறிப்பு 3 : இங்குத் தரப்பெற்றுள்ள தகவல்களில் உங்களுக்குக் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் அவற்றிற்கு உள்நோக்கம் கிடையாது என்பது உறுதி.

என் தமக்கையரில் ஒருவர் பல்லடம் பள்ளியின் தாளாண்மைக்குழு உறுப்பினர். ஆசிரியர்கள் விடுப்பில் செல்ல நேரிடும்பொழுது விடுவிப்பு ஆசிரியராக உதவுகிறார். கொஞ்சம் நன்கொடையும் கொஞ்சம் வட்டியில்லாக் கடனும் பள்ளிக்குக் கொடுத்துதவியுள்ளார்.

தமிழில் : முத்துக்குமரன்

படிப்பகம்

www.padippakam.com



# கண்ணகி கோட்ட விழா - கேரள காவல்துறையின் அத்துமீறல். கரூர் சமூக வரலாற்று சங்கம் கண்டனம்.

ஒவ்வொரு ஆண்டும், சித்திரை முழு நிலவு அன்று கம்பம், போடிநாயக்கனூர், வத்தலகுண்டு, வருஷநாடு இன்னும் பல தமிழகப் பகுதிகளில் மங்களதேவி கண்ணகிக்கு விழா எடுக்கிறார்கள். குறிப்பாகத் தேனி மாவட்டத்தில் உள்ள பூரணகிரி மலையின் மீது 4,800 அடி உயரத்தில் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு எடுத்த கோவில் உள்ளது. அது மங்கா தேவி கண்ணகிக் கோட்டம் என்றும், பூரணகிரி அம்மன் கோவில் என்றும் அழைக்கப்படுகிறது. செங்குட்டுவனுக்குப் பிறகு ராஜராஜ சோழன் பாண்டியர்கள் மற்றும் நாயக்க மன்னர்கள் உட்பட 1,500 ஆண்டுகள் தமிழகத்தின் மன்னர்களும், சிற்றரசர்களும் அக்கோட்டத்தை செப்பனிட்டு சிறப்பு செய்து வந்துள்ளார்கள். அது ஒரு தமிழர்களின் வரலாற்றுச் சின்னமாகும். சிலப்பதிகார காப்பிய நாயகியின் கோவிலாகும். அது தமிழகத்தின் எல்லையினுள் உள்ளது.

ஆனால் கேரள காவல்துறையினரும், வன இலாக்காவினரும் அக்கோவிலை ஆக்கிரமித்துக் கொண்டு தமிழர் அக்கோவிலில் சென்று வழிபாடு நடத்தவோ, வரலாற்றுச் சின்னத்தைக் காண வருவதையோ அனுமதிப்பதில்லை. வரலாற்றுப் பூர்வமாகவும், அளவை அடிப்படையிலும் கோட்டம் தமிழக எல்லைக்குள் இருப்பது கேரள அரசிற்கும் தெரியும். ஆனால் அதை இன்னொரு ஐயப்பன் கோவிலாக்கி கோடிக்கணக்கில் வருவாய் ஈட்டத் திட்டமிட்டு, தமிழர்களின் வழிபடும் உரிமையை மறுத்து, ஆண்டில் ஒரு நாள் அதாவது சித்திரை முழு நிலவு அன்று மட்டும் கோவிலுக்குச் செல்ல அனுமதிப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் தமிழர்கள் அக்கோவிலுக்குச் செல்வதற்கு அவர்கள் முட்டுக்கட்டைகளும், இடைஞ்சல்களும் தருவது ஆண்டுக்காண்டு அதிகமாகி வருகிறது. இந்த ஆண்டு தேனி மாவட்ட ஆட்சியரும், இடுக்கி மாவட்ட ஆட்சியரும், தமிழகத்தில் இருந்து வரும் வழிபாட்டாளர்களுக்கும், புராதான சின்னத்தைக் காண வரும் பிறருக்கும் கேரள அரசு, காவல் துறையினரும், வன இலாக்காவினரும் எதுவும் தொல்லைகள் தரக்கூடாது. மக்கள் வழிபாடு நடத்தலாம் எனவும் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். குமுளியில் இருந்து கோட்டம் வரை 15 கி.மீ. தூரத்திற்குக் கரடு முரடான பாறைகள் நிறைந்த ஊசிமுனை வளைவுகள் நிறைய உள்ள பாதையில் குறிப்பிட்ட ஜீப்புகள் மட்டுமே தான் செல்ல முடியும். மலையாளிகள் அவர்கள் ஜீப்பைத் தவிர மற்றவற்றை அனுமதிப்பதில்லை. அல்லாமலும், இந்த ஆண்டு ஒப்பந்தத்திற்கு விரோதமாகத் தமிழர்கள் கொண்டு சென்ற வீடியோ மற்றும் சாதாரண கேமிராக்களையும் பிடுங்கிக் கொண்டு விட்டார்கள். முரட்டுத்தனமாகவும், அதிகாரத் தோரணையோடும், ஆணவத்தோடும் நடந்து கொண்டு தமிழர்களுக்கு இன்னல் விளைவித்தார்கள்.

ஆனால், தமிழக அரசின் தேனி மாவட்ட டி.ஆர்.ஓ. மாலை 4 மணிக்குத் தான் கோட்டத்திற்கு வந்தார். தமிழர்கள் சொன்ன குறைகளுக்குத் தக்க பதிலே கூறவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



தமிழகப் காவல்துறையினரும் செயலற்று ஏதோ அரண்டு போனவர்கள் போல் இருந்தார்கள். ஆனால் எங்கு பார்த்தாலும் கேரளக் காவல் துறை அதிகாரம்தான். தமிழகக் காவல்துறை, அதிகாலையிலேயே கோட்டத்திற்கு ஒருவர் கொண்டு வந்து விட்ட வீடியோ கேமிராவை பிடுங்கிக் கொண்டு விட்டார்கள். பிறகு கேரளப்பகுதி சப்-கலெக்டர் அங்கு வந்தவர், தொலைந்து போகிறது. அவரை விட்டு விடுங்கள் என்று சொன்ன பிறகு தான் கேமிராவையே திருப்பிக் கொடுத்தார்கள். இவை நடந்தபோது தேக்கடி சொகுசு மாளிகையில் நாள் முழுவதும் தங்கியிருந்த தேனி மாவட்ட ஆட்சியர் வாய்மூடி மவுனியாகவே இருந்து விட்டார். கேரள அதிகாரிகளின் ஆணவத்தையும், தமிழக அதிகாரிகளின் மவுனத்தையும் கண்டு தமிழ்நாட்டிலிருந்து சென்றவர்கள் அதிர்ச்சிக்குள்ளானார்கள். அனைத்துப் பத்திரிக்கை நிருபர்களும் கோட்டத்திற்கு வந்திருந்தும், ஒரு இதழில் தவிர (தினமலர் 1.5.99) மற்ற எதிலும் செய்தியே வரவில்லை. தமிழக அரசு இவ்வாண்டு நிகழ்ச்சிகள் பற்றிய செய்தியை வெளியிடத் தடை செய்திருப்பதாக நினைக்க வேண்டி உள்ளது.

தமிழக முதல்வரின் குடும்பத் தொலைக்காட்சி சூரியா டி.வி, கேரள வனத்துறையினரால் 5 மணி நேரம் குமுளியிலேயே முடக்கப்பட்டுக் கிடந்தது. அந்தத் தொலைக்காட்சி குழுவினருக்குப் பிறகு மேலே செல்ல அனுமதி பெற்றுந்த தந்த் தமிழக அரசு, சாதாரணத் தமிழர்களுக்கு நிவாரணம் தேடித்தரவில்லை.

எனவே கேரள அரசின் இத்தகை அநாகரிகமான, தமிழர்களை அவமானப்படுத்தும் போக்கைக் கரூர் சமூக வரலாற்றுச் சங்கம் கடுமையாகக் கண்டிக்கிறது.

– பி.ஆர். குப்புசாமி

## நிலக்கொள்ளையை கண்டித்து கண்டனப் பொதுக்கூட்டம் - கூடலூர் நீலகிரி

தமிழ்நாட்டின் இயற்கை எழில்வளம் நிரம்பிய பகுதி நீலகிரி. இதில் கூடலூர், பந்தலூர் வட்டங்கள் இயற்கைக் காடுகள் நிரம்பிய பசுமையான பகுதி. இப்பகுதியில் வரலாற்றுச் சிறப்புமிகு ஆறுகள் உற்பத்தியாகி பெருக்கெடுத்து ஓடுகிறது. மற்றும் உலகில் அழிந்து போய்விட்ட பல்வேறு காலுயிர்களின் உய்விடமாகவும் இருக்கிறது.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இயற்கைக் காடுகளை அந்நிய மாநிலத்தை சேர்ந்த ஒருசில வசதி படைத்தோர் கொள்ளையடித்து வருகின்றனர். போலி ஆவணங்கள் தயார் செய்து பினாமி பெயரில் ஆயிரக்கணக்கான ஏக்கர் இயற்கைக் காடுகளை ஆக்கிரமிப்பு செய்து அதில் உள்ள கோடிக்கணக்கான ரூபாய் பெருமதியுள்ள காட்டு மரங்களை கேரளாவிற்கு கடத்தியுள்ளனர் மற்றும் நீதிமன்றத்தையும், அரசையும் ஏமாற்றி இந்த நிலக்கொள்ளையர்கள் 920 ஏக்கர் நிலத்திற்கு மோசடிப் பட்டா பெற்றுள்ளனர். இச்செயல்பாட்டால் தமிழ்நாட்டின் இயற்கைவளம் அழிக்கப்பட்டதோடு மண்ணும் பறிபோய்க் கொண்டிருக்கிறது. இந்த கொடுஞ்செயலை கண்டித்து கூடலூர்,

படிப்பகம்

www.padippakam.com



பந்தலூர் வட்டத்தில் உள்ள சமூக நலத்தின் மீது அக்கறையுள்ள தமிழ் அமைப்புகள் ஒருங்கிணைந்து 9.5.99 அன்று மாலை 4.00 மணியளவில் கூடலூர் – காந்தி திடல். மைதானத்தில் கண்டனப் பொதுக்கூட்டம் நடத்தியது. இந்த பொதுக்கூட்டத்தில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. பழ. நெடுமாறன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

## தீர்மானங்கள் :

1. உச்சநீதிமன்ற உத்தரவை மீறி 920 ஏக்கர் அடர்ந்த காட்டுப்பகுதிக்கு மோசடிப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதற்கு காரணமாக அரசு அதிகாரி பாண்டுரங்கன் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கண்டுபிடித்து கடுந்தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.

2. 920 ஏக்கர் மோசடிப்பட்டாவை அரசு உடனடியாக ரத்து செய்து இப்பட்டா பெற்றவர்கள் மீது கடும்நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. கூடலூர், பந்தலூர் வட்டங்களில் இடம் பெறும் நிலக்கொள்ளையை கண்டுபிடிக்க மத்திய புலனாய்வுத் துறை விசாரணை நடத்தப்பட வேண்டும்.

4. கூடலூர், பந்தலூர் வட்டங்களில் உள்ள அனைத்து நிலப்பரப்பும் மறுநில அளவீடு செய்யப்பட்டு முறைப்படுத்தப்பட வேண்டும்.

5. பெருந்தோட்ட உரிமையாளர்களால் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருக்கும் மின்சார வேலிகள் உடனடியாக அகற்றப்பட வேண்டும். மின்வேலி அமைக்க அனுமதி வழங்கப்பட கூடாது.

6. கோடிக்கணக்கான பெருமதியுள்ள காட்டுமரங்கள் அழிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி முழு விசாரணை நடத்தப்பட வேண்டும்.

7. இந்த மண்ணின் மைந்தர்களான பழங்குடிகள் மற்றும் தாயகம் திரும்பிய தமிழர்கள், சிறு விவசாயிகளின் அடிப்படை வாழ்வுரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.

8. இந்நிலக் கொள்ளையை ஆய்வு செய்ய சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய உயர்மட்ட குழுவை இப்பகுதிக்கு அனுப்பி உண்மையை கண்டறிந்து, நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவண்

அனைத்து தமிழர் கூட்டமைப்பு – கூடலூர்

தொடர்புக்கு :

விவசாயிகள் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

11/341, காசிம் வயல், கூடலூர், நீலகிரி.

படிப்பகம்

www.padippakam.com

15

# மன்னியுங்கள்

– புவியரசு

மன்னிப்பது மகத்தான மானுடப் பண்பு
மன்னிப்பிலும் மேலானது எதுவும் இல்லை.
அதனால், மன்னியுங்கள், முதலில் என்னை!
நீங்கள் அடி முட்டாள்கள் என்கிறேன்!
உங்களுக்கு சுரணையே இல்லை என்கிறேன்!
உங்கள் மண்டையில் களிமண் என்கிறேன்!
நீங்கள் மரியாதைகெட்ட அற்பப் புழுக்கள் என்கிறேன்!
என்னை மன்னியுங்கள் . . .

சினம் கொள்ளாதீர் சினம் சேர்ந்தாரைக் கொல்லி
சினம் கொண்டால் நீங்கள் செத்துப்போவீர்கள்!
உங்களால் சினம் கொள்ளவும் முடியாதே!
அது எப்போதோ உங்களை விட்டு
சுரணையுள்ளவனோடு ஓடிப்போய் விட்டது
கடவுள் உங்களைக் காப்பாற்ற மாட்டார்
அவர் உங்களை எப்போதும்
காப்பாற்றியதும் இல்லை காப்பாற்றப்போவதும் இல்லை.
அவருக்கு வேறு அவசர வேலை இருக்கிறது.
தற்காப்புப் பணியில் அவர் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்.
உண்மை சொல்வதற்காக என்னை மன்னியுங்கள் . . .

உண்மை உங்களுக்குக் கசக்கும் என்பது எனக்குத் தெரியும்

இருந்தாலும் என்ன செய்ய?

மூன்றாவது உலகப்போர் எப்போதோ தொடங்கி
நடந்துகொண்டிருக்கிறது – தெரியுமா உங்களுக்கு?

பார்த்தீனியம் தூவப்பட்டபோதே தொடங்கிவிட்டது அது . . .

பார்த்தீனியப் போரில் நீங்கள் தோற்றுப்போனீர்கள்.
வெற்றி பெற்று விட்டதாக அறிவித்த இளம் விஞ்ஞானி
மறுநாளே – ஏழாவது மாடியிலிருந்து
எட்டிக் குதித்துத் தற்கொலை செய்து கொண்டான்!

தள்ளிவிட்டது யாராக இருக்கும்
என்ற சந்தேகம் உங்களுக்கு எழவேயில்லை
முட்டாள்களே . . .

பல்லாயிரம் கால்நடைகள் சாவும்
பயிர்களின் நஞ்சும் பதற்றப் படுத்தவே

படிப்பகம்

www.padippakam.com



இல்லை உங்களை . . .
உரம் என்ற பெயரில் நஞ்சு விற்றோர் யார்?

அதற்குக் கடை திறந்தவர் யார்?
வீரிய வித்துக்கள் என்ற பெயரில்
மறு விளைச்சலுக்கு விளைவே இல்லாத
விதைகளை இறக்குமதி செய்யும்
மாண்சான்டோ மோசடிக்கு
வாசல் திறந்து வழிவிட்டவர் யார்?

என்ரான் கம்பனிக்கு புறக்கடைக் கதவு
திறந்த விட்டவர் யார்?

எங்கேயிருந்து வருகிறது அது?

சாதிமதச் சண்டையில் வெடிகுண்டுகளுக்குப் பின்னால்
உண்மையில் எவர் இருக்கக் கூடும்
என்ற யோசனை கூட உதிக்கவே இல்லை
உங்கள் மூளையில்.

உலகின் எந்தப் பகுதியில் நடக்கும் எந்தக் குழப்பமும்
பென்டகன் வாசற்படியிலிருந்தே
ஆரம்பமாகிறது என்ற தத்துவஞானி
பெர்ட்ரண்ட் ரசல் வாக்கு உங்கள் காதுகளில்
விழவே இல்லை செவிடர்களே . . .

ஞானவான்களை ஓடஓட விரட்டியதும்
சிலுவைகளில் ஏற்றியதும் மண்டியிட வைத்து
மன்னிப்புக் கேட்க வைத்ததும்தான்
உங்கள் மகத்தான சரித்திரம்.
புறாக்களைப் பருந்துகளுக்குத் தாரை வார்ப்பவர்கள் நீங்கள் . . .

மனசாட்சியையும் மனித நேயத்தையும்
பன்றிகளுக்கு விற்றுவிட்டவர்கள் நீங்கள் . . .

கேள்வி கேட்கவே தெரியாமல் போக
சந்தேக மின்னல் தோன்றாமலே போக
தொலைக்காட்சிப் பெட்டிமுன் அமர்ந்து
தொலைந்து பேர்ய்க்கொண்டிருக்கும் மடையர்கள் நீங்கள் . . .
என்பது தெரிந்தும் உங்களை மதித்து மன்னிப்புக் கேட்பது
கொஞ்சமாய் உங்களுக்கு மரியாதை கொடுத்துப்
பார்க்கலாம் என்றுதான் . . .

www.padippakam.com

17

# இறைவனாயிருந்தேன்

இதற்கு முன்னால் நான் இறைவனாயிருந்தேன்
படைத்துக் குவிப்பதும், பராமரிப்பதும்
துடைத்து முடிப்பதும் தொழில்களாயிருந்தன.
நதிகள், கடல்கள், நிறையத் துப்பினேன்.
மண், கல், பிசைந்து மலைகள் படைத்தேன்.
புலர்வதும் மறைவதும் பொழுதுகளென்பதும்,
மலர்வதும் உதிர்வதும் மலர்களென்பதும்
வாய்பாடுகள்போல் வழக்கில் வந்தன.
மோதல்கள், காதல்கள், மகிழ்ச்சி, வருத்தம்
யாவையும் சுழற்சியின் ஒழுங்கில் இயங்கின.
நியதிகளுக்குள்ளே நின்ற உலகத்தில்
மெதுமெதுவாய் என்னை மறக்கலாயினர்.
கோவிலில் என்னைக் கொண்டு போய்வைத்தனர்.
மீட்க வந்தவரைத் தீயிலெரித்தனர்
சடங்குகள் நிறைந்த சப்த இரைச்சலில்
சூழ்நிலைக் கைதியாய் வாழ்வது கொடுமை;
இறைவனாய் ஆனபின் இனியென்ன ஆவது?
அவஸ்தையும் ஒருவித அச்சமும் படர்ந்தன.
கூப்பிய கைகளைக் காண்கிறபோதெல்லாம்
ஏகமாய் எரிச்சல் என்னுள் எழுந்தது;
நைவேத்தியங்களும் நித்ய அர்ச்சனையும் – என்
கையாலாகாத் தனமென்று கருதினேன்.
கருணை மலர்ந்து கனிந்த கண்களில்
கனல்விட்டெரிந்தது கோப நெருப்பு;
அபயக் கரமோ ஆயுதமெடுத்தது.
காக்கும் கடமை காற்றில் பறக்கத்
தாக்கித் தகர்க்கும் வன்மம் பிறந்தது.
பூவிதழ் ஓரத்துப் புன்னகை மறைந்து
பக்கவாட்டில் பற்கள் முளைத்தன.

படிப்பகம்

www.padippakam.com



**இஷ்ட தெய்வமாய் என்னைத் துதித்தவர்**
**"துஷ்ட தேவதை" எனத் துரத்தத் தொடங்கினர்;**
**ஆசிர்வாதத்தை அலட்சியம் செய்தவர்**
**சாபத்துக்கஞ்சி சாந்திகள் செய்தனர்.**
இருந்த கோவிலை இழுத்தமூடி – நான்
மரங்களில் குளங்களில் வசிப்பதாய்க் கூறினர்.
கடவுளாயிருந்ததைக் காட்டிலுமெனக்கு
இந்த ஏற்பாட்டில் எத்தனை வசதி;
பின்னர்தான் நானொரு பைசாசமானேன்.
பகல் வெப்பத்தில் பதுங்கி உறங்கி
இரவு நேரத்தில் எழுந்து நடந்தேன்;
காற்றாய்க் கிளர்ந்து கதவுகள் இடித்தேன்
கற்களை எரிந்து ஓடுகள் உடைத்தேன்
போகிற மனிதரைப் பளீரென அறைந்ததும்
சாகிற காட்சி சுவாரஸ்யம் தந்தது;
மந்திர ஒலிகள் மறந்து போனபின்
கண்டத்திலிருந்து கிளர்ந்தது ஊளை;
அந்தி, சந்தி, அர்த்த ஜாமங்களில்
ஒவ்வொரு வீட்டிலும் உயிர்ப்பயம் வந்தது;
நீதி காக்கிற கடவுள் தொழிலினும்
ஆதிக்கப் பேயாய் அலைவதே எளிது;
ஒருநாள் ஊருக்குள் ஒரே பரபரப்பு – என்
பழைய கோவிலில் புனருத்தாரணம்.
"மற்றொரு தெய்வம் மண்ணில் வந்தெனை
வெற்றிகொள்ளும்" என வெகுவாய் நம்பினர்.
என்னை முன்னர் ஏற்றித் தொழுதவர்
பின்னிந்த தெய்வத்தின் பூஜையில் மூழ்கினர்;
கேட்கக் கேட்கச் சிரிப்பு வந்தது.
கோவில் திசையினைப் பார்த்துக் கூவினேன்
"நாளைய பேயே! நல்வரவாகுக! "

**– மரபின் மைந்தன் முத்தையா**

படிப்பகம்

www.padippakam.com



# புதிய தமிழிலக்கியம்

## 1. எட்டு திக்கும் மதயானை

நாஞ்சில் நாடனின் ஆறாவது நாவலாக வெளிவந்திருக்கிறது எட்டுதிக்கும் மதயானை. ஒருமுறை சுந்தரராமசாமி குறிப்பிட்டார். நாஞ்சில் நாடனின் படைப்புலகத்தை மூன்று சொற்களில் அடக்கிவிடலாம். கிராமம், நகரம், பயணம் என்று. இந்த வரையறைக்கு எட்டுத் திக்கும் மதயானை ஒரு விதிவிலக்கல்ல என்றாலும், இதன் நாயகன் பூலிங்கம் மேற்கொள்ளுகிற பயணம், நிதானமான தொழிலில் நிமித்தமான பயணமல்ல. உயிருக்குப் பயந்து போக்கிடம் புலப்படாமல் தலைகால் தெறிக்க ஓடுகிற ஓட்டம். ஒவ்வொரு விநாடியும் பதட்டம் நிறைந்ததாய் ஓடிக்கொண்டேயிருக்கிறான் பூலிங்கம்.

ஒரு குக்கிராமத்தில் வறுமையின் பிடியில் வாழ்ந்து கொண்டிருந்த இளைஞன் கயமையும், வஞ்சமும் நிறைந்த மகாநகரத்துக்குள் துரத்தியடிக்கப்படுகிறபோது, எல்லாத் திசையிலும் மதயானைகளே அவனை எதிர்கொள்கின்றன என்றாலும் பூலிங்கம் அப்பாவி இல்லை. அந்த வாழ்க்கைக்கு வேண்டிய நெளிவு சுழிவுகளையெல்லாம் போதிய அளவு கற்றுக் கொள்கிறான். அதனாலேயே நாஞ்சில் நாடனின் மற்ற நாவல்களில் வருகிற நாயகர்கள்மேல் நமக்கு வருகிற இரக்கம் பூலிங்கத்தின்மேல் வருவதில்லை.

"எல்லோரும் எல்லாமும் செய்து கொண்டிருக்கிறார்கள். எந்தத் தனியனும் கூர்மையான அர்த்தத்தில் சமூகத்தின் எதிரி. சமூகம் என்பதும் பொதுவான அர்த்தத்தில் தனியனுக்கு எதிரி. எல்லாம் வெளிப்புனிதம். தத்துவப் பன்னீர் தெளித்து சமயப் புகைபோட்டு, அறநூல் சாந்து பூசினாலும்" . . . (பக் 234) என்கிறார் நாஞ்சில் நாடன். இந்த நாவலின் அடிநாதமாக மேற்கூறிய சிந்தனையைக் கொள்ளலாம்.

சுசீலா, பானுமதி, கோம்தி (நாவலில் தவறுதலாக கோமதி என்று அச்சாகியிருக்கிறது) போன்ற பெண்கள் மட்டுமின்றி, வயது முதிர்ந்த பாபியும்கூட, பூலிங்கத்திற்கு அங்கங்கே ஆறுதல் தருகிறார்கள். ஒரு விதத்தில் பூலிங்கத்தின் அத்தனை அவஸ்தைகளுக்கும், தன்னையறியாமல் காரணமாகிவிட்ட, செண்பகத்திற்குக் கூட பூலிங்கத்தின்மேல் நிபந்தனையில்லாத பிரியம் இருந்திருக்கிறது. வாழ்வின் அவலங்களை மிகத் துல்லியமாக பதிவு செய்வதில் நாஞ்சில் நாடன் மறுபடியும் வெற்றி பெற்றிருக்கிறார். கொலை, கொள்ளை, பிறன்மனை விழைதல் போன்ற சமூகக் குற்றங்களைக்கூட, காரண காரியங்களோடு ஆராய்ந்து பார்த்தால் அவற்றின் அடித்தளத்தில் இழையோடும் நியாயத்தை கண்டுணர முடியுமென்பது கதையோட்டத்தில் பல்வேறு இடங்களில் நிறுவப்படுகிறது. சுசீலா, கோம்தி, ஆகியோரோடு தனக்கு நேர்ந்த உறவின் அதே அழுத்தமும் நியாயமும், பரமசிவத்தின் தாய் வாழைத் தோட்டத்துக்காரனோடு கொண்ட உறவிலும் இருக்கும் என்பது பூலிங்கத்தின் நம்பிக்கை.

படிப்பகம்

www.padippakam.com



கடைசியில் செண்பகத்தை பூலிங்கத்தோடு சேர்த்து வைத்து, நாவல் முடிவடைகிறது. இதில் சற்றே செயற்கைத்தனம் தலைகாட்டுவதுபோல் தெரிகிறது. அதுவும் எப்போதும் நிராதரவான தொனியில் ஒரு கேள்விக்குறியோடு முடிவுபெறும், நாஞ்சில் நாடனின் மற்ற நாவல்களை (தலைகீழ் விகிதங்கள் நீங்கலாக) வாசித்தவர்களுக்கு இந்த முடிவு அவசியம்தானா என்கிற கேள்வி எழுவதில் நியாயமிருக்கிறது.

ஜீவாவின் முகப்போவியத்தில் கவிழ்ந்திருக்கும் மௌனம் வாழ்வின் நிச்சயமற்ற தன்மையை வெளிப்படுத்துவதாய்ப்படுகிறது. இந்த நாவல், மனித வாழ்க்கையைப் பற்றி வெளிப்படுத்தும் மதிப்பீடு என்ன? நாஞ்சில் நாடனே சொல்கிறார்.

"வாழ்க்கை வேடிக்கையானது அல்ல. வினைகள் நிறைந்தது
நல்வினை, தீவினை, செயப்படு வினை, செயப்பாட்டு வினை . . ." (பக் 18)

– மரபின் மைந்தன் முத்தையா

வெளியீடு : விஜயா பதிப்பகம்
பக்கம் : 270 விலை : ரூபாய் 100/–

## 2. இன்னும் மனிதர்கள்

1980 முதல் 98 வரையிலான 18 ஆண்டுகளில் எழுதப்பட்ட 14 சிறுகதைகளை உள்ளடக்கி வெளிவந்துள்ள "இன்னும் மனிதர்கள்" தொகுப்பு. சேஷையா ரவியின் இன்னொரு படைப்பு முகத்தை வெளிப்படுத்துகிறது.

உயிர்களிடத்து நேசம், அதிகாரத்திற்கெதிரான சமர், சமூகத்தால் சீரழிக்கப்படும் கீழ்த்தட்டு மனிதர்கள், உதட்டில் உறவாடும் மேம்போக்கான நட்பு, அவ்வப்பொழுது சண்டையிட்டுக் கொண்டாடும் அடிநாதமாக இழையும் நேசம், காசுக்கு அடிமையாகாத தலித்தின் சுயமரியாதை. ஏழையின் பெருமிதம், மனிதாபிமானம் – இவைதான் கதைகள்.

இத்தொகுப்பிலுள்ள 9 கதைகள், கட்டியங்காரன் பாணியில் ஒரு கதை சொல்லியின் புறவயச்சித்தரிப்பாக வெளிப்பட்டுள்ளன. எஞ்சிய 5 கதைகள் நனவோடை உத்தியைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளன.

நனவோடை உத்தியில், மனப்போராட்டத்தையும், அகவுலகையும் விரிவாகப் பிட்டு வைக்க முடியும். புற உலகத்தர்க்கம் போலவே, அகஉலகத் தர்க்கத்திற்கும் அங்கே முக்கியத்துவம் உண்டு. கதாபாத்திரத்தின் பன்முகத்தன்மை, கண்ணுக்குச் சட்டெனப் புலப்படாத மனத்தின் சூட்சுமம், தனித்தன்மை மிக்க மனித ஆளுமை போன்ற அனைத்துக் கூறுகளும் இவ்வுத்தியால் எளிதில் கைவசமாகும். "பத்தனின் கதை", "மாடத்துறவி" ஆகியவை அந்த வகையிலான குறிப்பிடத்தக்க கதைகள்.

"திரைகள்" மூலம் ஆணாதிக்கப் போக்கை அம்பலப்படுத்தும் அதேசமயம்,

படிப்பகம்

www.padippakam.com



"காதலாகி" மூலம் ஆண்களின் மீதே நம்பிக்கை இல்லாத கலாவின் சித்திரத்தையும் கதாசிரியர் ரவி அருகே வரைந்து காட்டுகிறார். காதலைக் காட்டிலும், வெறும் கவர்ச்சியை மட்டுமே கண்டு ஏமாறும் இளமையின் போக்கைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது "ஒரு காதலின் கதை".

இத்தொகுப்பில் பொதுவாகவே பெண் பாத்திரங்கள் பற்றிய சித்திரிப்பு மிகக் குறைவாகவே உள்ளது. எந்தக் கதையிலும், வலிமையான பெண் பாத்திரம் இல்லாமற் போனது ஏமாற்றமளிக்கிறது.

இத்தொகுப்பிலுள்ள "எட்டாத தொடுவானம்" "தோழமை" ஆகிய கதைகள் கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஒரு புரட்சிகரமான அமைப்பிலுள்ள மனிதர்களின் பலவீனம் சுய அனுபவமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் சிறப்புத் தன்மையாகும். (புரட்சிகரமான அரசியல் அமைப்பில் முழுநேரமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் தோழர் எம், பின்னாளில் எப்படி தன்பெண்டு, தன் குடும்பம் எனச் சுருங்கி அடையாளமற்றுப் போய்விடுகிறார் என்பதைச் சுவையாகப் படம் பிடித்துக் காட்டுகிறது "எட்டாத தொடுவானம்".

சாக்கடைகளும், குப்பைமேடுகளும், துர்நாற்றம் நிறைந்த சேரி.ஒன்றில் பெரிய மர ஸ்டேண்டுகளில் குவித்து வைக்கப்பட்டிருந்த மாட்டிறைச்சியையும், பன்றிக் கறியையும், ஈக்களையும் பார்த்த பிராமண சமூகத்திலிருந்து வந்த தோழர் எம். கொள்ளும் அருவெறுப்பு, அமைப்பிற்கும் அவருக்குமான இடைவெளியை அதிகப்படுத்தும் முதல் புள்ளியாக விழுகிறது. அமைப்பில் தனக்கு அளிக்கப்பட்டு உள்ள அந்தஸ்து, அவருள் புதையுண்டு கிடந்த இல்லற வேட்கை, கட்சித் தோழர்கட்கும் அவருக்குமிடையே முகிழ்க்கும் சிறு சிறு மனத்தாங்கல்கள் – இவற்றின் விளைவாக அமைப்பிலிருந்து தன்னைத் துண்டித்துக் கொள்கிறார் தோழர் எம். – "மார்க்சியம், கம்யூனிசம் இதிலெல்லாம் எனக்குத் துளியும் நம்பிக்கை இல்லாம போச்சு. எதுக்கு வீணா நேரத்தை விரயப்படுத்தனும்னு தோணறது" எனும் அளவுக்கு அவரது மனப்போக்குத் திரிந்து விடுகிறது. "நவீன சிறு பத்திரிக்கை எம். /– தோழர் – எம் / மாயாவாதம் பேசும் எம். – இதில் எது நிஜம்? எது பொய்? ஒரு வேளை எல்லாமே நிஜம் கலந்த போலிகளா?"

"நான்கு ஆண்டுகளுக்கு முன் வரை நவீன நாடகம், நவீன சினிமா, சமூக அக்கறை என்றெல்லாம் தேடல் வசப்பட்டிருந்த ஒரு மனிதரால் இன்றெப்படி அறிந்த உண்மைகளுக்கு எதிரான துருவத்தில் நிலை கொண்டிருக்க முடிகிறது? எதையாவது சார்ந்து நிற்க நிர்ப்பந்திக்கும் வாழ்வின் மெய்த்தன்மை என்பது இதுதானோ? இருந்தும் இதைக் காட்டிலும் தீவிரமான கேள்விகள், சர்ச்சைகள் என்று முரண்பட்டவர்கள் கூட குறைந்தபட்சம் தம்மளவில் ஒரு கலக மனசோடிருக்கும்போது . . . . உண்மையில் சார்ந்திருப்பது, நேர்மை என்பதெல்லாம் அதுதானே? வாழ்க்கை பிரம்மராக்ஷசா . . .? அந்நியமாகிப் போயிருப்பது எம்மா? இயக்கமா? வாழ்வா"? என்ற நிச்சயமற்ற தன்மையில் கதை முடிகிறது. "தோழமை" சிறுகதையும், அமைப்பு சார்ந்த கருவைத்தான் உரக்கச் சிந்திக்கிறது. புரட்சிகர அமைப்புகளில், பாலியல் சிக்கல்கள் உரிய முக்கியத்துவத்துடன் கையாளப்படவில்லை, விளைவாக நிறையச் சேதாரம் ஏற்படுகிறது என்பது மையப்புள்ளி.

படிப்பகம்

www.padippakam.com



"காதல், காமம், தத்துவச் சிக்கல்கள் போன்றவற்றை சுலபமாக அமைப்புத் தோழர்களிடம் பகிர்ந்து கொண்டுவிட முடியாது. அப்படியே பேசினாலும், ஏதோ ஒரு காலத்தில் தைக்கப்பட்ட அற ஒழுக்கச் சட்டையை மாட்டிவிடுவார்கள். இல்லை லட்சியம், சித்தாந்தம் போன்றவற்றைக் காட்டி, வர்க்ககுண அச்சத்திலிருந்து விடுபட்டு, பாட்டாளித்துவநிலை பெற வேண்டுமென வலியுறுத்துவார்கள். இதெல்லாம் கூட ஒரு பேச்சுக்குத்தான். உண்மையில் இப்படிப்பட்ட விவாதங்கள் நிகழ்வது அபூர்வம்" – என்பதும், "தினவெடுத்த அலகோடு காமம் எப்போதும் கொத்தக் காத்திருக்கிறதே. என்னதான் ஒழுக்கம், காந்தீயம், மார்க்சீயம், ஆன்மீகம் என மனத்தை நிறைத்தாலும், குறிப்பிட்ட வயதிற்குப் பிறகு உடலியல் ரசாயனப்படி அதன் மேற்பரப்பில் – பாதி வெளியிலும், மீதி உள்ளேயும் அமிழ்ந்து மிதக்கும் பனிக்கட்டியை போல் – உணர்வுகள், ஆசைகள், கண்ணாடித் துகள்களில் வெறும் பாதங்களுடன் நடப்பதைப் போல் ரத்தக் கசிவோடு நாட்கள். இவற்றைப் பேசிப் பகிர்ந்து கொள்ளலாம் என்றால், வறண்ட தத்துவச்சூழல் அதற்கு இடமளிப்பதில்லை. ஒரு வேளை எல்லோருக்கும் இல்லை என்றாலும் கணிசமான தோழர்களுக்கு இந்தப் போராட்டம் இருக்கும்தான். ஆனால், சிறுகீற்றும் வெளிவருவது இல்லை" என்பதும் கதை நாயகன் கோபியின் மனக் குறையாக வெளிப்படுகிறது. இது அவசியம் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒரு சிக்கல் என்பதை நடைமுறை நமக்கு உணர்த்துகிறது.

இக்கதைத் தொகுப்பில் பின்னிணைப்பாக ரவியின் இரு கடிதங்கள் சேர்க்கப்பட்டு உள்ளன. அதில் மழை பற்றிய ஒரு குறிப்பு வருகிறது.

"என்னைப் பொறுத்தவரை "மழை" சோகத்தின்
குறியீடாகவே தோன்றுகிறது. காரணம் கேட்காதே
எனக்குத் தெரியவில்லை. காரணங்கள் ஏதுமின்றி
உணரமட்டுமே முடிகிறது. ஒரு வேளை "மழை"
என்ற பிரும்மத்தின் முன் புற உலகின் இரைச்சல்கள்.

இயக்கங்கள் எல்லாம் துடிப்பற்று ஒடுங்க, திடுமென ஒரு "வெறுமை" கவிகிறதே அதே வெறுமை எனக்குள் ஒருவித சோகத்தைத் தெளிப்பதால் எனக்கு அப்படித் தோன்றலாம். காரணம் தேடி அலையும் மனசின் ஒரு ஊகம்தான் இந்த வியாக்கியானம்" . . . .மழை எனக்குப் பிடித்திருக்கிறது; அது தரும் சோகத்தோடு கூட அதை நான் ரசிக்கிறேன். இதுதான் முக்கியம்"

எனவே, கதையின் உணர்ச்சிப் பின்புலத்தை நுணுக்கமாகக் கட்டமைக்க மழை, ஒரு குறியீடாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதை உணர முடிகிறது. வெறும் சித்திரிப்பாக இல்லாமல், ஒரு உத்தியாக மழை பயன்படுத்தப்பட்டுள்ளதை ரவியின் கடிதம் சுட்டுகிறது. சிறுகதைகள், கவிதைகளோடு, பின்னிணைப்பில் வரும் இரு கடிதங்களும் ஆழ்ந்த வாசிப்பைக் கோருகின்றன – ரவியின் ஆளுமை, துடிப்போடு வெளிப்படும் சுவையான பகுதி இது.

படைப்பின் சூட்சுமங்களையும், வாழ்க்கை பற்றிய அசலான கண்ணோட்டத்தையும், ஆழ்ந்த வாசிப்பின் அனுபவங்களையும், சுயசரிதக் கூறுகளையும், பாவனைகளையும் பாசாங்கு அற்று ரவி பதிவு செய்துள்ளார். அவரே சொல்வதுபோல், "கைப்புணர்ச்சியால்,

படிப்பகம்

www.padippakam.com



துயரால், நம்பிக்கையின்மையால், அல்லல்படும் நேரத்தில் கடிதம் ஒரு இளைப்பாறுதலாக இருக்கிறது. இழந்த வலிமையை மீண்டும் கைப்பற்றி விடுவதான திருப்தி கிடைக்கிறது".

படைப்பு பற்றிய ரவியின் கண்ணோட்டம் இக்கடிதங்களில் பொதிந்து கிடப்பது கூடுதலாக நமக்குக் கிடைக்கும் புதிய வெளிச்சம். "நான் நம்பிக்கையோடும் நம்பிக்கையின்மையோடும்தான் வாழ்க்கையைப் பார்க்கிறேன்; அனுபவிக்கிறேன். காரணம் வாழ்க்கை அப்படித்தான் இருக்கிறது . . . இலக்கியத்தில் புதிதாய்ச் சொல்ல ஒன்றுமில்லை. அதே மனிதர்கள், குடும்பம், அற ஒழுக்கம், சோகம் சந்தோசம், காதல், கருணை – எல்லாம் அதே. என்றாலும் இலக்கியம் நின்று விடவில்லை. மீண்டும் சொல்லப்படுகிறது. எப்படி? பழையவை – புதிய பார்வைகளில், அர்த்தங்களில் ஒவ்வொரு தனிமனிதனின் (எழுத்தாளன்) பார்வையிலும், அவன் அனுபவத்தோடு இரண்டறக் கலந்து புதிது எனும் தோற்றம் பெற்று அது வெளிப்படுகிறது".

சிறுகதைகளும், கவிதைகளும் பெருங்குவியலாகக் கொட்டப்படும் இந்தக் கட்டத்தில் "உன்னிடம் எளிமை இருந்தால், உண்மை வெளிப்படும்" எனும் ஆதாரகருதியோடு படைப்பு வானத்தில் சிறகடிக்கும் சேஷையா ரவி, தமிழுக்குக் கிடைத்துள்ள நம்பிக்கையான புது நாற்று.

- கண. குறிஞ்சி

## 3. காயங்கள்

இந்தச் சிறுகதைகளை வடித்தவர்கள் மேட்டுக்குடி மக்கள் அல்லர். பெரும்பாலோர் சமுதாயத்தில் மிகச் சாதாரண நிலையில் உழைத்து வாழும் குடும்பப் பெண்மணிகள். அவர்களில் பலருக்கு இது முதல் முயற்சி என்பதை எண்ணும்போது அவர்களுடைய சமுதாய விழிப்பு, பொறுப்பு, கடமை உணர்வுகளும், ஆர்வமும், அழுத்தமாகவும் தெளிவாகவும் சொல்லும் தமிழ்நடைப் பாங்கும், படிப்பவர்களுடைய உணர்வுகளை உசுப்பிவிடும் திறனும் வியக்கத்தக்கன.

இந்தத் தொகுப்பில் விடிவெள்ளி போல் ஒளிர்ந்து நிற்பது அருப்புக்கோட்டை சர்மிளா அவர்களின் நான் எங்கே அவர் எங்கே என்ற 3 பக்கச் சிறுகதை. வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள் மிகச் சிலவற்றைக்கூடப் பெற அல்லல்படும் ஒரு கிழவரின் உழைத்து வாழவேண்டும் என்ற கோட்பாடு. சமுதாயக் கடமையுணர்வின்றி வேடிக்கை பார்க்கும் மக்களின் முன்னால், தன் குளிர் உடம்பைப் போத்தக் கிடைத்ததை, மனநலம் குன்றி ஆதரவற்று இறந்த சிறுமியின் மானங்காக்க விரைந்து போர்த்தும் அந்தக் கிழவரின் பண்பு. இவற்றை நயம்பட சொல்லியுள்ளார் ஆசிரியர்.

சென்னை லலிதா அவர்களின் தீப்பொறி, மகளிர் விடுதிகளில் தங்கி உழைத்துக் கல்வி கற்கும் பெண்களின் மனப்போராட்டங்களையும், குடும்பச் சிக்கல்களால் அவர் கூறும் துன்பங்களையும் விவரிப்பதுடன், திருமணம் உட்படத் தங்களது எதிர்கால வாழ்வைத் தாங்களே அமைத்து நடத்தும் உரிமையை நிலைநாட்ட வேண்டுமென்ற இன்றைய தலைமுறை பெண்ணினத்தின் துடிப்பையும், துணிவையும் வெளிப்படுத்தியிருப்பது பாராட்டிற்குரியது.

படிப்பகம்

www.padippakam.com



திருமரக்காடு ஆயக்காரன்புலம் வேளாண்குடி உ. ஜோதி அவர்களின் காயங்கள் காயலாம், பொட்டல்காடு கறுத்தம்மா சாயலில் இருந்தாலும்; முட்டாள்தனமான மரபுகளில் சிக்குண்டு நாட்டுப்புறங்களில் கணவனின் தாலிக்கு அடிமையாக வாழ்வதைவிட, கணவனால் ஒதுக்கி வைக்கப்படுவதை இழிவாகக் கருதும் பழைய தலைமுறைப் பெண்கூடத் தன்மகள் கல்வி கற்றுப் பொருளீட்டிக் காலூன்றித் தந்நிலையில் வாழவிரும்பும் உறுதியை அறிந்து ஏற்றுக்கொள்ளும் விழிப்புணர்வு பெற்று விட்டாள் என்ற அறிவுறுத்தல் பயனுள்ளது.

கோவை குணவதி அவர்களின் வாழும் வரையிலும் கதை, வரலாற்று வகையில் காலங் காலமாக நிலவிவரும் ஆணாதிக்கத்தின் கொடுமைகளை ஆழ்ந்த அவல உணர்வுடன் எடுத்தியம்பியுள்ளது. மாறிவரும் இன்றைய காலநிலையிலும், தலித் பண்பாடு, பெண்ணியம். மனிதநேயம் என்ற இயக்கங்களிலும் ஆணாதிக்கம் புதுப்புது உருவங்களில் நிலைபெற முயல்வதைப் பெண்கள் விழிப்புணர்வுடன் இருந்து எதிர்கொள் வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.

மதுரை பாரதி கண்ணன் தமது எதிரியில் மாமியார் மருமகளைப் பார்வையால், பேச்சால், செயலால் காயப்படுத்துவதும் ஈஸ் டீசிங் தான் என்கிறார். பல நேரங்களில் பெண்களே தங்களை அறியாமல் பெண்களுக்கு எதிரியாக நடந்து கொள்கின்றனர். இளவயதில் மகள் தந்தையின் செல்லமாகவும், மகன் அன்னையின் செல்லமாகவும் வளர்வது இயல்பு. ஆனால் பெண்கள் வயது எய்தித் திருமணமானபின் தாயின் நிலைமை ஒருதலையாக மாறுகிறது. அம்மா என்பவர் தேவையான குடும்பச் செலவுகளைச் சுருக்கியும், கணவன், மகனுக்குத் தெரியாமல் சிறுவாடு சேர்த்தும், தன் பெண்ணுக்கும், பெண்வழிப் பேரக் குழந்தைகளுக்கும் மிகையாகச் சீர்செய்ய வேண்டுமென்று முனைவதோடு, மருமகளை வேற்று ஆளாகவே பார்க்கின்றார். ஆனால் மருமகனை ஏற்றுக் கொள்கின்றார். இந்தத் தீய மனப்பான்மையின் தவற்றை மகள் தாய்க்கு எடுத்துச் சொல்லித் திருத்தவேண்டும் என்கிறது இக்கதை.

சீர்காழி புத்தூர் இலட்சுமிதேவி, ஏறத்தாழ தம் வாழ்க்கைச் சூழ்நிலையையும். எதிர்காலக் கனவுகளையும் சிறு கதையாக வடித்ததே விடிவுகாலம். புறையோடிய சமுதாயச் சடங்குகளில் கட்டுண்ட நடுத்தர வேளாண் குடும்பம், மூன்று பெண்களைக் கரையேற்றவும், இரண்டு மகன்களைப் படிப்பிக்கவும் பட்ட கடன், பயிர்த்தொழிலில் பின்னடைவுகளால் மிகுந்து அழுதத, கணவன் கண்மூட, மனைவி மக்களைத் தேற்றி, சொத்துக்களை மாற்றிக் கடனடைத்துத் துணிவுடன் ஊறுகாய்த் தொழில் வாணிபம் தொடங்கி மக்களை வழி நடத்தும் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கிறார்.

திருச்சிக்குக் குடிபெயர்ந்து வந்த கே. இராசாமணி, யாழ்ப்பாணத்தில் பயின்றவர். ஈழத் தமிழர்களின் அண்மைக்கால அவல வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டு அமைத்த கதை காலம் மாறும். வேலைக்குச் சென்று ஊதியம் ஈட்டியும் மாமியாரின் சீதனக் கொடுமையைத் தாங்கமுடியாமல், முதுகெலும்பில்லாத கணவனிடம் நம்பிக்கையிழந்து, கொலைக்கு அஞ்சி தப்பித்துச் சென்று, தன்னுடைய இளமைக்கால நண்பனை எதிர்பாராத முறையில் சந்தித்து அவருடன் வாழத் துணிவுடன் முடிவு செய்யும் புரட்சிப் பெண்ணின் கதை.

பொறியியலும் ஆங்கில இலக்கியமும் கல்வியியலும் கற்றுத்தேறியவர். தேவகோட்டை ஐ. மகிமைப்பிரகாசி. சிலம்பையும் மேகலையையும் கோர்த்து, மாதவியின் கற்பையும், மணிமேகலையின் ஆடல்கலையின் புனிதத்தையும் சிறப்பித்து, உயர்ந்த இலக்கிய நடையில் அமைத்திருக்கும் நாட்டிய அரங்கேற்றம் அவரது தமிழ்மொழிப்

படிப்பகம்

www.padippakam.com



புலமையையும், அந்தஊழி நடனத்தை, மணிமேகலைக்கு வற்றாத உண்டிக் கலத்தைப் பெற்றுத்தந்த வேள்வியாகவும் புனைந்திருப்பது அவருடைய கற்பனைத் திறனையும் வெளிப்படுத்தியுள்ளன.

பட்டுக்கோட்டை லீலாவதி அவர்கள் உருவாக்கியுள்ள கிராமத்து அத்தியாயம் இனிமையான, அமைதியான நாட்டுப்புற வாழ்க்கையின் நேர்த்தியான படப்பிடிப்பு.

நெய்வேலி வாழ் குடும்பத் தலைவி ஜூலியட் ராஜ் (எஸ்டர் செல்வி) அவர்களின், பரிசுபெற்ற கதை தவம். கணவனின் அன்றாடக் கொலை மிரட்டல்களைத் தாழமுடியாத மனைவி, அவன் தூவிய மண்ணெண்ணையிலேயே அவனைத் தீக்கிரையாக்குகிறாள். அதனை கண்ட அப்பாவி சிறுமி அம்மாவின் செயலை நடந்திட அவர் சிறை செல்கிறார். அம்மாவின் மேலான அன்பை ஒரு தவம்போல் வளர்த்துவந்த அந்த வெள்ளை உள்ளம், வீட்டாரின் ஏசலுக்கிடையில் அவர் வருகைக்காக ஏங்கிக் கிடக்கின்றது. விடுதலை பெற்றுத் திரும்பும் தாய், பாசத்துடன் மகளைத் தழுவுகிறாள். குற்ற உணர்வோடு வெளியே இருந்து மனச்சான்றால் தினம்தினம் கொல்லப்படுவதைவிட தான்பட்ட சிறை தண்டனையே குற்றத்திற்குச் சிறந்த மாற்று, பாவ மன்னிப்பு என்று உணர்ந்து மகளைத் தேற்றுகிறார். குமுறும் எரிமலைகளாகச் சமுதாயத்தில் உழலும் பெண்களுக்குத் த கொதிப்பை வெளியிட ஒரு வடிகாலாகவும், படிப்பவர்களுக்கு அழுத்தமான படிப்பினையாகவும் அமையும். இதுபோன்ற சிறுகதைகள் இன்றைய சமுதாயத்தேவை.

"காயங்கள்" தொகுப்பு ஞானி பெண் சிறுகதை எழுத்தாளர் கதைகள்.

நிகழ் வெளியீடு

ஜெ. நாராயணசாமி

## 4. யுனெஸ்கோ கூரியர் ஏப்ரல் 1999 ஒரு கண்ணோட்டம் - மு. குமரவேல் நீருக்கு என்ன விலை?

'நீரின்றி அமையாது உலகு' என்றார் வள்ளுவர். நீரின் இன்றியமையாமை குறித்த ஏராளமான தகவல்களுடன் வெளிவந்துள்ளது ஏப்ரல் (99) யுனெஸ்கோ கூரியர். ஒவ்வொரு மாதமும் ஒருகுறிப்பிட்ட தலைப்பை மையமாகக் கொண்டு, அவை தொடர்பான பலதரப்பட்ட கட்டுரைகளையும் புள்ளி விவரங்களையும் வெளியிட்டு வருகிறது யுனெஸ்கோ கூரியர்.

ஃபெடரிக்கோ மயூர் எழுதியுள்ள தலையங்கம், உலகெங்குமுள்ள நீர் வள ஆதாரம் எவ்வாறு பாழ்பட்டுள்ளது என்பதை விளக்குகிறது. இன்று உலகில் நீர் நெருக்கடி முற்றி வருவதற்கு இவர் கூறும் காரணங்கள் மிகவும் முக்கியமானவை.

"பேரளவுப் பொருளாதாரத்தையும், தொழில் நுட்பத்தையும் அடிப்படையாகக் கொண்டு மேம்பாட்டு மாதிரி காரணமாகத் தோன்றிய நெருக்கடி, சமூக, மானுட, சுற்றுச்சூழல் அம்சங்களைப் புறக்கணித்ததால் வந்த நெருக்கடி. 'அற்புதத்' தீர்வுகள் என்பதை நாம் தீவிரமாக எதிர்க்க வேண்டும்" "தொழில் நுட்பத்தை அதற்குரிய

படிப்பகம்

www.padippakam.com



இடத்தில் வைக்கவேண்டும்". உலகில் நீர் ஆதாரவளத்தை காப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அவசர அவசியத்தை விளக்கும் தலையங்கம்.

'விலைமதிப்பில்லா அரிய நீர் வளம்' என்ற கட்டுரையில் கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் நம்மை அதிர்ச்சியில் ஆழ்த்துகின்றன. "மடகாங்கல் கிராமப் பகுதியில் ஒருவர் தினமும் 10 லிட்டர் நீர் பயன்படுத்துகிறார். இது உயிர் வாழ்வதற்குத் தேவையான மிகக் குறைந்த அளவு. பிரான்சில் ஒருவர் 150 லிட்டரும் அமெரிக்காவில் 450 லிட்டரும் நாள்தோறும் பயன்படுத்துகிறார்". ஏற்றத்தாழ்வின் இன்னொரு பரிமாணத்தை இதில் காண்கிறோம். கனடாவில் ஒரு சராசரிக் குடும்பம் தினமும் 350 லிட்டர் பயன்படுத்துகிறது. ஆப்பிரிக்காவில் இந்த அளவு 20 லிட்டர். ஐரோப்பாவில் 165 லிட்டர். ஒரு பால்மாடு ஒரு லிட்டர் பால் கொடுக்க 4 லிட்டர் நீர் குடிக்க வேண்டும். நான்கு கார் டயர்கள் செய் 9,400 லிட்டர் நீர் தேவைப்படுகிறது. உலகுக்கு ஒரு நாளைக்குத் தேவைப்படும் பத்திரிக்கைக் காகிதத்தை உற்பத்தி செய்ய 1400 கோடி லிட்டர் நீர் தேவை கோளத்தின் நீர் வேட்கை என்னும் தலைப்பில் உலகப் படத்தை வரைந்து கடந்த காலங்களில் நீர் வள அளவு, எதிர் வரும் காலங்களில் நீர்வளத்தின் தன்மை பற்றி குறிப்பிடப்படும் விவரங்கள் அதிர்ச்சி அளிக்கக் கூடியவை

"2025 இல் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் 1950 இல் இருந்ததைவிடவும் பாதியளவு மட்டுமே தலைக்கு நீர்வளம் இருக்கும். ஆசியாவிலும் இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் முன்பிருந்ததைவிடக் கால் பகுதி மட்டுமே நீர் வளம் இருக்கும். ஆனால் உண்மையில் பெரிதும் பாதிக்கப்பட இருப்பவை ஆப்பிரிக்காவும், மத்திய கிழக்கு மண்டலமுமாகும். இங்கு 2025இல் கிடைக்கவிருக்கும் நீர்வளம், 1950இல் இருந்த அளவில் எட்டில் ஒரு பகுதியே ஆகும்.

ஸ்பெயினின் கிழக்குக் கடற்கரையில் ஓடுகிற டூரியா ஆற்றின் கரையிலுள்ள உழவர்கள், தங்களுக்குள் எழும் நீர்ப்பூசல்களைத் தீர்க்க நீதிமன்றம் ஒன்றை வைத்துள்ளனர். இந்த நீதிமன்றம் 10ம் நூற்றாண்டிலிருந்து, வியாழன் தோறும் நண்பகலில் கூடுகிறது. ஐரோப்பாவிலுள்ள மிகப் பழைய நீதிமன்றம் இந்தத் தீர்ப்பாயம். உழவர்களே நமது நடுவர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். இவர்கள் 'மக்கள் நடுவர்கள்' என்று அழைக்கப்படுகின்றனர். நடுவர்கள் நில உரிமையாளராக மட்டும் இருந்தால் போதாது. குறிப்பாக அவர் உழுதொழில் செய்பவராக இருக்க வேண்டுமென்பதே விதி. இம்மன்றத்தில் வழக்குரைஞர்கள் இல்லை. தீர்ப்புகள் எழுதி வைக்கப்படுவதில்லை. குற்றவாளிகளுக்குச் சிறைச்சாலைகள் இல்லை. நமது நாட்டிலுள்ள பஞ்சாயத்து அமைப்பு முறையை நினைவூட்டுகிறது ஸ்பெயின் தீர்ப்பாயம்.

தென் ஆப்பிரிக்காவின் நீர் நிலைமையை விளக்கும் 'எல்லோருக்கும் நீர்' கட்டுரையில், நீரைப் பயன்படுத்துவதிலுள்ள இன ஒதுக்கல் முறை தெரிகிறது. "கறுப்பர் நகரியங்களில் மக்கள் நீருக்காக வாளிகளைத் தூக்கிக் கொண்டு அலைவதைக் காணலாம். எனினும் அண்டையிலுள்ள வெள்ளையர் குடியிருப்புகளில் நீர் நிரம்பி வழிந்து வீணாவதைக் காணலாம். அங்கு ஒவ்வொரு வீட்டிலும் இரு குளியலறைகள், ஒரு சமையலறை, பசுமையான தோட்டங்கள் எந்நேரமும் தண்ணீர்".

படிப்பகம்

www.padippakam.com



'பன்னாட்டுப் பூசல்களுக்கு மரபுமுறைத் தீர்வுகள்' என்ற கட்டுரை உலகமெங்கும் பெருகி வரும் நீரியல் நெருக்கடிகளுக்கு, சட்டங்களை நம்புவதை விட, காலங்காலமாக மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வரும் வழக்காற்றுச் சட்டமே சிறந்தது என்கிறார் ஆசிரியர். 20 ஆம் நூற்றாண்டில் நடந்த பல போர்களினால் நீர்ப்பங்கீடுகள் பாதிக்கப்படவில்லை. ஆனால் வரும் காலங்களில் நீருக்காகப் போர் நடைபெறும் என்னும் அபாய அறிவிப்பை வெளியிடுகிறார் பெரும்பாலான நாடுகளில் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படக் காரணமாகச் சொல்லப்படுவது தொழில் மயம் மற்றும் வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றம்.

பன்னாட்டுக் கம்பெனிகளில் அடுத்த இலக்கு நீர்தான் என்பதை இந்த இதழைப் படிக்கும்போது தெரிகிறது. தண்ணீர் அங்காடி முறையை ஏற்படுத்துவதன் மூலமே தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்று பல மேனாட்டார் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். மான்சாண்டோ என்னும் மரண விதைக் கம்பெனி இனி நீர் வணிகத்தில் ஈடுபடப் போகின்றது என்ற செய்தியையும் இணைத்துப் பார்த்தால் விளங்கும். உலகைக் காட்டும் பலகணி என்று இந்த இதழைச் சொல்வது பொருந்தும்.

யுனெஸ்கோ கூரியர், தனி இதழ் ரூ. 7
தென்மொழிகள் புத்தக நிறுவனம்,
18 மேயர் இராமநாதன் சாலை
சேத்துப்பட்டு, சென்னை – 600 031

## வரப்பெற்றோம் - நன்றி

வினாக்காலம் (நாவல்)
ஆசிரியர் : தேவகாந்தன்
இலக்கு வெளியீடு,
87, பஜனை கோவில் தெரு,
சென்னை – 94 பக்கம் 290 விலை ரூ. 75

தமிழ் வேள்வி
ஆசிரியர் : மு.பெ. சத்தியவேல் முருகனார்
ஏகலைவன் பதிப்பகம்
9, டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர்,
சென்னை – 41 பக்கம் 128 விலை : ரூ. 25

இலக்கண உருவாக்கம்
ஆசிரியர் : டாக்டர் சேவை சண்முகம்
மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 108
பக்கம் 198 விலை : ரூ. 36

தமிழ் முழக்கம்
ஆசிரியர் ந. திருமலை
த.மு.எ.ச. அரசரடி கிளை, மதுரை – 16
பக்கம் 76 விலை ரூ. 15

நங்கூரம் (கவிதைகள்)
கவிஞர் மானூர் புகழேந்தி,
நிலா பதிப்பகம், கோவை 45

இருபதாம் நூற்றாண்டு
இலக்கியச் சிற்பிகள்
ஆசிரியர் ந. முத்துநிலவன்
16, அன்னவாசல்தெரு,
மன்னார்குடி – 1
பக்கம் 72 விலை ரூ. 15

படிப்பகம்

www.padippakam.com



# லண்டன் கடிதம்
## பிரித்தானிய அரசியலில் பிரிவினை ஆட்சி

- இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

6.5.99ல் பிரித்தானியர் குடியரசை மாற்றியமைக்கும் தேர்தல்கள் வேல்ஸ், ஸ்கொட்லாந்து என்ற பகுதிகளில் நடந்தன. பிரித்தானியக் குடியரசின் அமைப்பில் வேல்ஸ், ஸ்கொட்லாந்து, வட அயர்லாந்து, இங்கிலாந்து என்ற நான்கு நாடுகளும் உள்ளன.

உலகத்தில் பல பாகங்களைத் தங்கள் கைக்குள் வசமாக்கிக் கொண்டதுபோல் தனது அண்டை நாடுகளாக வேல்ஸ், ஸ்கொட்லாந்து, அயர்லாந்து என்ற நாடுகளையும் இங்கிலாந்து தன் வசமாக்கிக் கொண்டது. அயர்லாந்தின் தெற்குப் பாகம் 1921ல் சுதந்திரம் பெற்றது. வட அயர்லாந்தில் இன்னும் பிரச்சினை தொடர்கிறது. வேல்ஸ்சின் மொழி கிட்டத்தட்ட அழிந்து விடும் நிலையில் உள்ளது. ஸ்கொட்லாந்து, அயர்லாந்து மொழியான கேலிக் என்ற (GAELIC) மொழிக்கும் அதேகதிதான். ஆனால் பிரித்தானிய பாராளுமன்றத்திலும், அரச குடும்பத்திலும் வேல்ஸ் நாட்டாருக்கோ, ஸ்கொட்டிஷ் நாட்டாருக்கோ எந்தப் பேதமும் கிடையாது. தற்போதைய பேரரசியின் தாய் எலிஸபெத் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்தவர். பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் லொயிட்ஸ் போன்ற பிரதமர்கள் வேல்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள்.

கடந்த பல ஆண்டுகளாக வேல்ஸ், ஸ்கொட்லாந்து மக்கள் தங்கள் நாட்டுப் பிரச்சினைகளுக்கு தாங்களே முடிவு கட்ட உரிமை வேண்டும் என்று முறையிடத் தொடங்கிவிட்டார்கள். ரோனி பிளேர் பதவிக்கு வர முதல் பிரித்தானியச் சிறுபான்மை மக்களின் (ஸ்கொட்லாந்து, வேல்ஸ், வட அயர்லாந்து) கோரிக்கையை நிறைவேற்றி வைப்பதாக உறுதி சொன்னார்.

அவர் பதவிக்கு வந்து இரண்டு வருடங்களின்பின் அவர் கொடுத்த வாக்குறுதியின்படி தேர்தல்கள் நடந்தன. 300 வருடங்களின் பின் ஸ்கொட்லாந்தின் தனிப் பாராளுமன்றம் அமைக்கப்படுகிறது.

இந்த சட்ட சபைகளுக்கு ஒரு குறிப்பிட்ட அதிகாரம் தான் உண்டு. வேல்ஸ் நாட்டு தேசியவாதிகளும் ஸ்கொட்டிங் தேசியவாதிகளும் எதிர்பார்த்தபடி அவர்களுக்கு முழு அதிகாரம் கிடைக்கவில்லை. எதிர்க்கட்சிக்காரர்களாக மட்டும் இருக்கலாம். ஸ்கொட்டிஷ் தேசியக் கட்சி எப்போதும் பிரித்தானிய ஆதிக்கத்தை வெறுத்து வந்தது. இங்கிலாந்துக்குக் கிடைக்கும் பெரும் தொகையான பணத்தைக் கொடுப்பது ஸ்கொட்லாந்துப் பகுதியிற் கிடைக்கும் எண்ணெய்க் கிடங்குகளாகும். அந்தச் செல்வம் தங்கள் நாட்டைச் சேர்ந்தது என்றும் அந்தப் பணத்தைத் தங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்குச் செலவிட வேண்டும் என்று கேட்பதும் நியாயமானதாகும்.

படிப்பகம்

www.padippakam.com



வேல்ஸ் நாட்டைச் பொறுத்தவரையில் 70ம் ஆண்டுகள் வரை இரும்புத் தொழிற்சாலைகளும், கரிச்சுரங்கங்களும் பிரித்தானிய வல்லரசுக்கு நிறையச் செல்வத்தைக் கொடுத்தன. அந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் கிட்டத்தட்ட மூடப்பட்டு விட்டன. தற்போதைய நிலையில் இவர்கள் பிரிந்து போவது ஆதாயமான விடயமா என்று அரசியல அவதானிகளால் அலசப்பட்டாலும் ரோனிபிளேர் தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றியதை எல்லோரும் வரவேற்கிறார்கள். ஆனாலும் ரோனி பிளேரின் தொழிற்கட்சி தேவையான இடங்களைப் பெற முடியாததால் இரு நாட்டில் தொழிற்கட்சியுடன் ஒத்துப்போகும் லிபரல் டெமோக்கிரட்டிக் கட்சியுடன் சேர்ந்து அதிகாரம் செய்யப் போகிறார்கள்.

300 ஆண்டுகளுக்குப் பின் அமையவிருக்கும் ஸ்கொட்லாந்து நாடாளுமன்றத்தின் முதன் மந்திரியாகப் போகிறவர் டொனால்ட் டுவர் (Donald Dewar). வேல்ஸின் முதன் மந்திரியாகப் போகிறவர் அலன் மைக்கேல் (Alun Michael) இருவரும் ரோனி பிளேரின் அபிமானத்துக்குரியவர்கள். தொழிற்கட்சியின் அடிப்படைக் கொள்கைகளில் மிகவும் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்கள் தொங்கு பாராளுமன்றம் பதவிக்கு வந்தால் கொன்சர்வேர்ட்டிவ் கட்சியும் தேசியவாதிகளும் என்ன தலைவலி கொடுப்பார்கள் என்று சொல்ல முடியாது.

வேல்ஸ் நாட்டின் சட்டதிட்டங்கள் இங்கிலாந்து நாட்டின் சட்டதிட்டங்கள் மாதிரியே உள்ளன. ஆனால் ஸ்கொட்லாந்து எப்போதும் தங்களுக்குரிய சட்ட திட்டங்களுடன் தங்கள் பிரதேசத்தைப் பரிபாலித்து வந்திருக்கிறார்கள். இந்தப் புதிய பாராளுமன்றங்கள் மூலம் என்னென்ன மாற்றம் வரும் என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

இந்தத் தேர்தலில் பிரிவினையாளர்களுக்கு மக்கள் முக்கிய இடம் கொடுக்கவில்லை. இங்கிலாந்தின் மூன்று பெரிய கட்சிகளான லேபர், கன்ஸர்வேர்ட்டிவ், லிபரல் டெமகிராடிக் என்பவர்களைத்தான் பெரும்பாலும் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் நிம்மதி தரும் செய்தியாகும்.

14.5.99 இங்கிலாந்து நாட்டில் ஒரு சரித்திர பிரசித்தமான நாளாகும். இன்று மிகவும் முக்கியமான பாதாள ரெயில் ஒன்று சேவைக்கு விடப்படுகிறது. (Jubili Line) ஜுபிலி லைன் என்று சொல்லப்படும் இந்த லைன் கிழக்கு நகரமான ஸ்ராட்போர்ட்டிலிருந்து மிலேனியம் டோம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் கிறினிவிச் என்ற உலாப்பிரசித்தி பெற்ற (ஞாபகம் இருக்கிறதா உலகத்தின் நேரமே கிறினிவிச்சிற் தான் கணிக்கப்படுகிறது. இங்கிலாந்தின் திறமையான அரசி மட்டுமல்லாமல் கன்னி அரசி (Vivgin Queen) என்று சொல்லப்பட்ட் முதலாவது எலிஸபெத்தின் பிறந்த இடம் கிறினிவிச் மாளிகை) நகரத்திற்கு போகிறது. இந்தியாவிலிருந்து லண்டனுக்கு மிலேனியக் கொண்டாட்டங்கள் பார்க்க வருவோர்க்கு எத்தனையோ கேளிக்கைகள் காத்துக் கிடக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com



# சமூக அறிவர் அரங்க ஆட்சி மன்றக் குழுக் கூட்டம் கடந்த 24.5.99 அன்று புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் 'சுகவனம்' பண்ணையில் நடைபெற்றது. - விவாதத்தின் ஒரு பகுதி.

**மு.க. சுப்பிரமணியம்:** 1970 களிலேயே தொடங்கிவிட்ட உலகமயமாதல் மற்றும் தனியார்மயமாதல் போன்ற கொள்கைகள்தான் இன்று சமூகத்தில் நாம் காணும் சிக்கல்களுக்கு அடிப்படை. இத்தகைய உலகமயமாதல் கொள்கைகளுக்கு ஆதரவாக இருப்பது அரசும், அதிகாரவர்க்கமும் மக்களிலேயே சில ஊன்றிய நலமிகள் இதற்குக் காரணம். இன்றைக்கு ஒரு புறம் உலகமயமாதல். இன்னொரு பக்கம் பஞ்சாயத்துராஜ். உலகமயமாதல் அதிகாரங்களை ஓரிடத்தில் குவிக்கிறது. பஞ்சாயத்துராஜ் அதிகாரத்தைப் பரவலாக்கு என்கிறது. இன்று பன்னாட்டு வணிகர்கள், அரசு, அதிகார வர்க்கம் என மூவரும் சேர்ந்துவிட்டனர். இவர்கள்தான் கூட்டாகக் கொள்ளையடிக்கின்றனர். அரசியலில் இன்று கூச்சல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவையெல்லாம் வெற்றுக் கூச்சல்கள். இவர்களுக்கு அதிகாரம் வேண்டும் அவ்வளவுதான்.

**நம்மாழ்வார் :** உலகமயமாதல் என்கிற பெயரில் பன்னாட்டு நிறுவனங்களுக்கு பச்சைக் கம்பளம் விரிக்கிறது அரசு. ஒரு காலத்தில் காந்தி அயல்நாட்டுத் துணிகளை எரிக்கும் போராட்டத்தை நடத்தினார். அது ஒரு போராட்டமுறை. எல்லா மக்களிடமும் பரவியது அந்தப் பிரச்சாரம். காந்தியின் பெயரைச் சொல்லிக்கொண்டே இன்றைய அதிகார வர்க்கம், நாட்டின் தற்சார்பைக் கேள்விக்குள்ளாக்கும் வேலையைச் செய்து வருகிறது. இது ஒரு பித்தலாட்டம். இந்தப் பித்தலாட்டத்தை மக்கள் புரியும் வண்ணம் செய்ய வேண்டும். பழைய காலனியத்தில் ஒருவனுக்கு அடிமையாக இருந்தோம். திப்பு சுல்தான் ஆங்கிலேயர்களை எதிர்த்த போராட்டத்தில், பிரெஞ்சுக்காரர்களிடம் கூட்டு சேர்ந்தார். பிரெஞ்சுக்காரர்கள், பிரிட்டிஷாரை ஒழிக்க ஆயுதம் தர ஒப்புக் கொண்டனர். அந்தச் சமயத்தில் இந்தியாவுக்கு வெளியே பிரிட்டிஷாரும், பிரெஞ்சுக்காரர்களும் ஒப்பந்தம் செய்து கொண்டனர். ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷார் பிடித்திருந்த பகுதிகளை பிரெஞ்சியரிடம் கொடுத்துவிடுவது, அதேபோல் ஆசியாவில் பிரெஞ்சுக்காரர்கள் பிடித்திருந்த பகுதிகளை பிரிட்டிஷாரிடம் ஒப்படைத்துவிடுவது என்பதே அந்த ஒப்பந்தம். எனவே, திப்புவுக்கு ஆயுதம் கிடைக்கவில்லை. அதனால் அவர் தோற்றார். ஆனால் இன்றைய காலனியத்தில், எல்லா நாட்டிலுமுள்ள கம்பெனிகள் தமக்குள் ஒப்பந்தம் செய்து கொண்டு, ஒருவர் தயாரிப்பதை இன்னொருவர் தயாரிப்பதில்லை'என முடிவு செய்து கொண்டனர். உலகம் முழுவதுமுள்ள முதலாளிகள் தமது சந்தையைப் பங்கிட்டுக் கொண்டனர். அதுதான் உலகமயமாதல்.

**பல்லடம் முத்துக்குமரன் :** உலகமயமாதல் என்று சொல்லும்போது கூடவே வருவது வளர்ச்சி பற்றிய வரையறை. பன்னாட்டு நிறுவனங்களை எதிர்க்கும் போது நாம் தொழில் வளர்ச்சியை எதிர்க்கிறோம் என்ற பிரச்சாரம் வருகிறது. ஆக உண்மையான

படிப்பகம்

www.padippakam.com



வளர்ச்சி-என்பது என்ன? போக்குவரத்து வளர்ச்சியையும், தொலைத் தொடர்பில் இன்று பெற்றுள்ள வளர்ச்சியையும் எந்த அளவுகோலால் அளப்பது?

**தங்கசாமி :** ஒரு நாடு வளர்ச்சியடைந்துள்ளதா என்பதை அந்நாட்டு மக்கள் எவ்வாறு அமைதியாக, இயற்கையோடு இயைந்து மனித நேயத்துடன் வாழ்கின்றனர் என்பதைப் பொருத்தே இருக்கிறது.

**மு.க. சுப்பிரமணியம் :** வளர்ச்சி என்றால் என்ன? வளர்ச்சி என்பது சமூகத்தின் வளர்ச்சி. மக்களுக்கிடையே ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது என்பதுதான் வளர்ச்சிக்கான நிபந்தனை. எல்லோருடைய நன்மைக்கானதைத்தான் வளர்ச்சி என்று சொல்லமுடியும். வளர்ச்சியில் இரண்டு வகை உள்ளது. உடலியல் தேவைகள், உணவு, உடை, இருப்பிடம் போன்றவை. மற்றொன்று ஆன்மீகம் என்கின்றனர். கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் மனவியல் தேவைகள் என்கிறோம்.

ஐம்புலன்களுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்வது என்று வைத்துக் கொள்வோம். எதை உற்பத்தி செய்வது? எது மனிதனுக்கு மிக மிக அடிப்படையான தேவையோ அதை உற்பத்தி செய்ய வேண்டும். வறுமைக்கோடே இருக்கக்கூடாது. இதுதான் வளர்ச்சியின் அடிப்படை. இதை உண்டாக்குவதற்குரிய மூல சக்திகள் எவை? மூல வளங்கள் என்று வரும்போது அவற்றை இரண்டு வகையாகப் பிரிக்கிறோம். ஒன்று மீண்டும் புதுப்பிக்கக் கூடிய ஆதாரங்கள். இரண்டாவது மீண்டும் புதுப்பிக்க முடியாத ஆதாரங்கள்.

மூல வளங்களைப் பயன்படுத்தும்போது மீண்டும் புதுப்பிக்கக் கூடியதாக இருக்கவேண்டும். அத்தகைய மூலவளங்களைக்கொண்டு செய்யப்படும் உற்பத்தியே வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும். மீண்டும் புதுப்பிக்கக்கூடிய ஆதாரங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பண்டங்களே மனித சமூகத்தின் அடிப்படைத் தேவைகளாக இருக்கும்.

**மு.க. சுப்பிரமணியன் :** எந்தெந்த மூலவளங்கள், தாங்களாகவே மறு உற்பத்தி செய்து கொள்கின்றனவோ அந்த மூலவளங்களைப் பயன்படுத்தி உண்டாகக்கூடிய பண்டங்கள்தான் மனிதனின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பண்டங்கள். ஆனால் இது நிறைவேறியவுடன் என்ன நடக்கிறது. பேராசை பெருநஷ்டம் என்பது மிகச் சிறந்த பழமொழி என்பேன். மனிதனுக்குப் பேராசை வந்துவிட்டது. மனிதன் உண்டாக்கிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திலிருந்துதான் இந்தப் பேராசை வந்துள்ளது. இதன் பொருள் விஞ்ஞானமே, தொழில்நுட்பமே கூடாது என்பதல்ல. அந்த விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்துகிறபோது, திரும்பவும் புதுப்பிக்க முடியாத மூலவளங்களை செலவழிக்க ஆரம்பித்தான் மனிதன். பெட்ரோலியம் பொருட்கள் இதற்கு நல்ல உதாரணம். இதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் நமக்குக் கொடுப்பவை வசதிகள். வசதிகளுக்கு மேல் ஆடம்பரம்.

படிப்பகம்

www.padippakam.com



ஆக வளர்ச்சி என்பது என்ன? புதுப்பிக்கக்கூடிய ஆதாரங்களை பயன்படுத்தி செய்யப்படுவதுதான் வளர்ச்சி. நாம் புதுப்பிக்க முடியாத ஆதாரங்களை பயன்படுத்தும் போது, இயற்கை சீற்றம் கொள்கிறது. நமது தேவை, வசதி இவைகளுக்கும் மேல், நமது உல்லாசம், கேளிக்கைக்காக பண்டங்களை உற்பத்தி செய்கிறோம். அவ்வாறு உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் செலவு, மனித உழைப்பை ஈடு செய்ய புதுப்பிக்க முடியாத ஆதாரத்தைப் பயன்படுத்துகிறோம்.

நம்மாழ்வார் : பெட்ரோல், நிலக்கரி போன்றவை புதுப்பிக்க முடியாத ஆதாரங்கள். இவைகளின் பயன்பாட்டை ஒரு வரம்பிற்குள் வைத்துக் கொள்ள வேண்டும். புதுப்பிக்கப்படக் கூடிய ஆதாரங்கள் என மரம், பயிர், கால்நடை, மீன் போன்றவற்றைச் சொல்லலாம். புதுப்பிக்கப்படக்கூடிய ஆதாரங்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யும் போதுதான் செழிப்பு வரும். அவ்வாறு உற்பத்தி செய்யும்போது பெரும்பாலான மக்களின் பங்களிப்பு அந்த உற்பத்தியில் இருக்கவேண்டும். அப்போதுதான் பலன் எல்லோருக்கும் சென்று சேரும். மக்களுக்கான உற்பத்திதான் வளர்ச்சி. ஒட்டுமொத்தமாக தேசத்தில் எவ்வளவு உற்பத்தியாகிறது என்றே பார்க்கின்றனர். எத்தனைபேர் சாப்பிட்டனர் என்று பார்ப்பதில்லை. மாவட்ட செய்தி மடலில், குடிதண்ணீருக்காக இவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது என்று மட்டும் சொல்கின்றனர். எத்தனை மக்களுக்கு தண்ணீர் கிடைத்தது என்று சொல்வதில்லை. பொருள்களைப் பற்றியே பேசுகின்றனரே ஒழிய மனிதர்களைப் பற்றிப் பேசுவதேயில்லை.

உலக அளவில் உயிரியல் பன்முகத்தைக் காப்பதற்கு ஒப்பந்தம் போட்டுள்ளனர். நமது நாட்டு மந்திரியும் அதில் கையெழுத்துப் போட்டுள்ளார். ஒப்பந்தம் சொல்வது இதுதான்.

"அந்தந்தப் பகுதியில் வாழும் மக்கள் தமது பகுதியின் உயிரினப் பன்முக வளர்ச்சியில ஈடுபடவேண்டும். திட்டமிடலில், செயல்பாட்டில், மக்கள் பங்கெடுக்க வேண்டும். அதனால் கிடைக்கும் பலன் அந்தந்தப் பகுதி மக்களுக்கே பயன்பட வேண்டும்."

தொகுப்பு : மு. குமரவேல்

## வரப்பெற்றோம் - நன்றி

பழனாத்தா ஆசிரியர் : டி.எம். ராஜா
நட்சத்திரா பதிப்பகம், திருப்பூர் – 3
பக்கம் 92 விலை ரூ. 20

12ம் ஆண்டு நிறைவு மக்கள் நாடக விழா மலர்
சென்னை கலைக்குழு, 16, புதுத்தெரு,
சென்னை – 4 பக்கம் 135 விலை ரூ. 60

தியானக் கவிதைகள் ஆசிரியர் : சின்ன சாத்தன்

எக்ஸில் – 6
மார்ச் – ஏப்ரல் இதழ்
பிரான்சு. பக்கம் 58

உயிர் நிழல் – 2
மார்ச் – ஏப்ரல் இதழ்
பிரான்சு. பக்கம் 66

படிப்பகம்

www.padippakam.com

என்று நாம் கருதினோம். ஜெயின் ஆணையத்தின் முடிவுகள், ஜெயின் விசாரணையின்போது மைய அரசின் ஒத்துழைப்பின்மை முதலியவற்றையும் முன்னிறுத்தி வழக்கை உச்சநீதி மன்றம் தள்ளிவிடும் என்று எதிர்பார்த்தோம். பயங்கரவாதத் தடுப்புக்கான தடா சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டதை மறுத்த உச்சநீதிமன்றம் காவல் துறையின் வன்முறையின் கீழ் 'கைதிகள்' அளித்த வாக்குமூலங்களை ஏற்றுக்கொண்டது ஒரு விசித்திரம்தான். ஈழத் தமிழகத்திற்கு அமைதிப்படையை அனுப்பியதன் மூலம் 6000 பேர் மரணத்திற்கு காரணமான இராசீவைக் கொல்லும் நோக்கில்தான் சதிகாரர்கள் திட்டமிட்டனர் என்பதையும் ஏற்கிறது உச்சநீதிமன்றம். சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்று திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டாலும் பிரதமரை உச்சத்திற்கு உயர்த்தி வைத்து தீர்ப்புத் தருகிறது நீதிமன்றம். சதியில் பங்கு பெறாத 19 பேரை விடுதலை செய்த நீதிமன்றம் வேறுவகையில் அவர்கள் செய்த குற்றங்களுக்கு எத்தனை காலம்சிறைத்தண்டனை விதித்திருக்கலாம் என்பது பற்றி ஆராயவில்லை. தொடர்ந்து பல நாடுகளிலும் மரண தண்டனை ஒழிக்கப்பட்டு வருவதை உச்சநீதிமன்றம் கண்டுகொள்ளவில்லை. மரண தண்டனையிலிருந்து பெண்ணை விடுவித்திருக்கலாம். சட்டம் இருட்டறையில்தான் செயற்படுவதென உறுதி பூண்டிருக்கிறது. உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பை அடுத்து வரும் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். இப்பொழுது யாருடைய கருணைக்காகவோ நாம் காத்திருக்க வேண்டும். நளினியை நாம் வாழவைக்க முடியுமா? வாழ்த்த முடியுமா? மற்றவர்களையும்தான்.

5. தமிழ்க்கல்வி குறித்து உங்களது அக்கறை என்ன? என்ற முறையில் சென்ற இதழில் தமிழ் எழுத்தாளர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தோம். 20 பேர்களுக்கு தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதினோம். இதுவரை இருவர் பதில் அனுப்பியுள்ளனர். இன்னும் எதிர்பார்த்திருக்கிறோம். அடுத்த இதழில் இக்கடிதங்கள் வெளிவரும். அனைத்திந்திய பல்கலைக் கழக தமிழாசிரியர் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்க்குடிமகன் வாரியிறைத்த கருத்துக்களில் ஒன்று, முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்வோர் தற்கால தமிழ்ப் படைப்பாளிகளின் படைப்புக்களை, எடுத்துக் கொள்கின்றனர். இப்படி பெருமைப்படுத்துவதனால் நவீன தமிழ் எழுத்தாளர்களுக்கு ஆணவம் ஏற்படுகிறது. அதனால் இவர்கள் தமிழை மதிப்பதில்லை. ஆகவே இவ்வாறு செய்யக்கூடாது என்கிறார் தமிழ்க்குடிமகன். இவர்களுக்கு தொல்காப்பியம் தெரியாது என்கிறார் தமிழண்ணல். இதற்கெல்லாம் நவீன தமிழ் எழுத்தாளர்களின் பதில்கள் என்னவாக இருக்க முடியும்? தமிழ்நேயத்திற்கு எழுதுங்கள்.

6. அடுத்து வரும் இதழ் தமிழ்நேயத்தின் 12வது இதழ். இதுவரை தவறாமல், பெருத்த அக்கறையோடு, நண்பர்கள் ஒத்துழைப்போடு கொண்டு வருகிறோம். 32 பக்கங்களுக்கு மேல் அகலக்கால் வைக்கவும் முடியாது. தமிழ்த்தேசியத்தைப் பல முனைகளிலிருந்தும் வளர்த்தெடுக்கும் முறையில் செயல்பட்டு வருகிறோம். அஞ்சல் செலவும் அதிகரித்து வருகிறது. முன்பு 50 ரூபாய் நன்கொடை கேட்டோம். இப்பொழுது ரூ. 60 தேவை. இதுவும் போதாது. தமிழ்நேயம் மிக்கவர் ரூ. 100 அனுப்புங்கள். இதழ் தொடர்ந்து வருவதை உறுதிப்படுத்துங்கள். நன்றி.

படிப்பகம்

www.padippakam.com

நிகழ் : தமிழ் நேயம் (தனிச்சுற்றுக்கு மட்டும்) நன்கொடை ரூ 5/-

# தொலைதல்

இராத்திரியில் கவிதை எழுதிக்கொண்டிருக்கையில்
கதவு தட்டிச் சொன்னார்கள்
அவனின் அகால மரணத்தை

இசைப் பிரியனான அவன்
பூக்களையும் பட்டாம் பூச்சிகளையும் தழுவிக் கிடந்தவன்

சுயம்வீழ்த்தப்பட்ட போதில்
அவன் மனசு என்ன செய்திருக்கும். . .
இசையை மேய்ந்திருக்குமா. .
பட்டாம் பூச்சியின் முதுகிலேறி
வானத்துக்கு பயணித்திருக்குமா . .

குரல்வளை காற்றைத் துறக்கும்போது
அவன் அம்மா மார்புக்கூட்டை அறுத்தெறியும்
ஓலத்தின் அரிவாளோடு உடலின் உச்சத்தில்
தலைதெறிக்க ஓடியிருப்பாளா . . .

பாறைகளை விழுங்கும் வெறியோடு
உயர்ந்த மலையில் ஏறி வாழ்வின் மீதான
சாபங்களோடு இறங்கியிருப்பானா
மகனைப் பற்றிய கர்வத்திலிருந்த அப்பன் . . .

அவன் நேசத்திற்கினிய சகோதரி
பசி ஆரம்பிக்கும் இடத்திலிருந்து
வலிகளைத் தோண்டியெடுத்து சாவின் முகத்தில் வீசியிருப்பாளா . .

பிரபஞ்சம் அவனின் இருப்பை
மூக்குச்சளியாய் சிந்திவிட்டு தூங்கப்போய்விடுமோ . . .
அந்த அகால நடுநிசியில்
நான் கவிதையை முடிக்காமல் நிறுத்தியிருந்தேன்
அவன் தொலைத்த காற்றைத் தேடியபடி . . .!

(விபத்தில் மரணமடைந்த திரு. கல்யாணியின் நினைவுக்கு)

-பாலைநிலவன்

ஆசிரியரும் வெளியிடுபவரும்

கி.பழனிச்சாமி (ஞானி)

123, காளீசுவரர் நகர், கோயமுத்தூர் 641009 தொலைபேசி : 235040

அச்சாக்கம் : ஜி.எம்.சிஸ்டம்ஸ், 10வது வீதி, காந்திபுரம், கோயமுத்தூர்.

படிப்பகம்